HNB GRAMEEN

# மெஹெவர

இருள் நீக்கும் உன்னத பணி

2016 ஒக்டோபர் - நவம்பர் இதழ்





வாழ்க்கை கடலில்
பயணிப்பதற்கு
நாம் என்றும்
பக்கபலமாக இருப்போம் ...





# வாழ்க்கையின் அர்த்தம்



# கால்களால் விமானம் ஓட்டும் அதிசயப் பெண்

அவள் பெயர் ஜெசிகா கோக்ஸ். அவள் இவ்வுலகில் பிறக்கும் போது இரண்டு கைகளும் இன்றியே பிறந்தாள். அதாவது அந்தப் பெண் குறைபாடுடைய பெண்ணாகவே இவ்வுலகில் தோன்றினாள்.
இப்பெண்ணின் தாயார் சிறுபாராயம் முதல் இப்பெண்ணுக்கு பேருதவியாக இருந்தார். நண்பியாகவும் இருந்தார். அவ்வாறே இப்பெண்ணின் தகப்பன் தனது குழந்தை கைகள் இல்லாமல் பிறந்ததாக எண்ணி ஒருநாளும் கண்ணீர் சிந்தியதில்லை. தனது குழந்தைக்கு பெற்றோர் இருவரும் அதிக அன்பு செலுத்தினர். அன்பின் மூலமாக உற்சாகமூட்டி தைரியசாலியாக வளர்த்தார்கள். அவளுடைய வீட்டில் நல்ல ஆலோசனைகளும் சிறந்த வழிகாட்டல்களும் ஒவ்வொரு நாளும் கிடைத்தன. இதனால் தான் குறைபாடுடைய பெண் என்பதை மறந்து வாழக்கூடிய சூழல் உருவானது. எமது நாட்டில் அநேக பெற்றோர் தமது குழந்தை குறைபாடுடைய குழந்தையாக பிறந்தால் அந்தக் குழந்தையை வெளியில் காட்டாமல் வளர்ப்பதுண்டு. அவ்வாறே மனதளவிலும் அவர்களை நோகடிப்பர். இந்தக் குழந்தை எம்மை தீண்ட வந்த குழந்தை. எமக்கு துன்பத்தை ஏற்படுத்த



வேண்டுமென்பதற்காக பிறந்த குழந்தை என்று அந்தக் குழந்தையை பார்த்து கூறுவதை காணலாம். இதனால் அந்தக் குழந்தை மனதளவில் துன்பப்பட்டு உற்சாகம், தைரியம், மனவளர்ச்சி ஆகியன பாதிப்படைகிறது. இதனால் அக்குழந்தையின் எதிர்காலம் சூனியமாக்கப்பட்டு அவர்களின் வாழ்வு சின்னாபின்னமாவதற்கு பெற்றோர் காரணமாக இருக்கிறார்கள்.
எனினும் ஜெசிகாவின் பெற்றோர் அவளுக்கு நாளாந்தம் வழங்கிய தைரியமான வார்த்தைகள் அந்தப் பெண்ணின் எதிர்காலம் சிறப்பானதாக அமைய வழியேற்படுத்தியதே அன்றி தனக்கு இரு கரங்களும் இல்லையென்பதை எண்ணி கவலைப்படவில்லை. இதனால் அவளும் பெற்றோரும் கிடைக்காத ஒன்றையெண்ணி கவலைப்படாமல் எதிர்காலத்தை எவ்வாறு வெற்றிகொள்வது என்பது தொடர்பிலேயே சிந்தித்துக் கொண்டிருந்தனர். இதனால் தைரியமாக எந்த விடயத்தையும் செய்வதற்கு பழக்கப்பட்டது. அவள் இன்றும் தமது பெற்றோர் மீது அதிக அன்பையும் தைரியமான வழிகாட்டலையும் நினைவு கூறுகிறாள். அவள் இதற்கான காரணமாக கூறுவது அவளின் தாயும் தந்தையும் தனது பிள்ளைக்கு கைகள் இல்லாமல் பிறந்ததாக எண்ணி ஒருநாளும் வருத்தப்படவில்லை என்பதாக கூறுகிறாள்.
ஜெசிக்காவுக்கு இரண்டு கைகளும் இல்லாத போதும் ஏனைய மாணவிகளைப் போன்று சகல விளையாட்டுகளிலும் பங்குபற்றினாள். குறிப்பாக ஜிம்னாஸ்டிக், நாட்டியம், பாடல் பாடுவது போன்றவற்றில் அதிக ஆர்வம் காட்டினாள். இதற்கு மேலதிகமாக நீச்சல், வாகனம் ஓட்டுதல், பியானோ இசைத்தல், கராத்தே விளையாட்டு போன்றவற்றிலும் தமது திறமைகளை வெளிக்காட்டினாள். இந்த விளையாட்டுகளை தான் கல்வி கற்ற பாடசாலையிலும் பிரத்தியேகமாக தான் வெளியிடங்களுக்கு சென்று பயிற்சி பெற்றுக் கொண்டார். அவ்வாறே கராத்தே போட்டியில் கறுப்புப் பட்டி வீராங்கணையாக மகுடம் சூடிக் கொண்டார். அவளுடைய வாகனத்தை மற்றவர்களின் துணையின்றி தானே ஓட்டிச் செல்வதுடன் எண்ணெய் நிரப்பும் பணியையும் அவளே செய்து வந்தாள். இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டு பல்கலைக்கழக கல்வியைத் தொடர்ந்து சமூக விஞ்ஞானத்தில் பட்டமொன்றையும் பெற்றுக் கொண்டாள். அவ்வாறே தனது உள்ளத்தில் நிறைவேறாத ஆசையொன்று இருந்தது. அதாவது தனக்கு கைகள் இல்லையென்பதை குறைபாடாக கருதாமல் தான் ஒரு விமான ஓட்டியாக இருக்க வேண்டுமென்ற கனவு இருந்தது. அவளுக்கு வீட்டில் எவ்வித தடைகளும் விதிக்காமல் அதிலும் அவள் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதுடன் விமான ஓட்டியாக வருவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதனால் எவ்வித அச்சமும் இன்றி விமான ஓட்டுனர் பயிற்சி பாடநெறியில் கலந்து கொண்டு வெற்றிகரமாக பூர்த்தி செய்தாள். இதன் மூலம் உலகில் கைகள் இல்லாமல் விமான ஓட்டி என்ற பெயரைப் பெற்றதுடன் உலகப் பிரசித்தி பெற்ற பெண்ணாகவும் பெயர் பெற்றாள். கைகள் இல்லாமல் வானத்தில் இரு கால்களினால்



விமானத்தை ஓட்டுவதுடன் அதில் பாரிய விளம்பரமொன்றும் காட்சிபடுத்தப்பட்டிருந்தது. அது எவரோ ஒருவரினால் அனுப்பப்பட்டிருந்தது. அதில், 'Look mom, without arms' பாருங்கள் அம்மா இரு கைகள் இன்றி என்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அவள் தனது மகளிர் தினத்தை இவ்வாறு கொண்டாடினார். அவள் ஒரு முழுமையான பெண்ணாகும். உலகில் கைகள் இன்றி விமானம் ஓட்டும் விமானியாகும். உலகில் கைகள் இன்றி விமான ஓட்டும் பத்திரத்தை இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை. கைகள் இல்லையென்றால் எதுவும் செய்ய முடியாதென்று பலர் நினைக்கலாம் அல்லது தெரிவிக்கலாம். எனினும் ஜெசிகா அவ்வாறு ஒருநாளும் சிந்திக்கவில்லை. சிந்திப்பதற்கான வாய்ப்பும் இருக்கவில்லை. கராத்தே விளையாட்டு, எழுதுதல், விமானம் ஓட்டுதல், வாகனம் ஓட்டுதல் போன்றவற்றை சாதாரண மனிதர்கள் செய்வது போன்று இலகுவாக செய்கிறார். அவ்வாறே இன்று உலகம் அறிந்த சாதனைப் பெண்ணாகவும் திகழ்கிறாள். அவள் இன்று மனிதர்களின் முன்மாதிரிமிக்க, பிரசித்திபெற்ற பெண்ணாக உருவெடுத்துள்ளார். இந்த சம்பவத்தின் மூலம் நாம் அறிந்து கொள்வது இரண்டு கைகளும் இல்லாவிட்டாலும் இலக்கை நோக்கி அச்சமின்றி தைரியமாக செயற்பட்டால் எந்தவொரு சவாலையும் இலகுவாக வெற்றிகொள்ள முடியும். உங்கள் வாழ்க்கையில் இவ்வாறான அனுபவங்களை பெற்று வாழ்க்கையின் இலக்கை பூர்த்தி திடசங்கட்பம் கொள்ளுங்கள்.



பிரேமசிறி கமகே
தலைவர், கைத்தொழில் அபிவிருத்தி நிலையம்



(விளம்பர கதை)

HNB GRAMEEN

# யாலு வுடன் யாலுவாகுங்கள் - விளம்பரம் தயாரிக்கப்பட்ட முறை

(நண்பனுடன் நண்பனாகுங்கள்)

சிறுவர் சேமிப்பு கணக்கு



பரீட்சையில் முதலாவது நபராக சித்தியடைந்த தனது பேரக் குழந்தைக்கு நூறு ரூபா பணத்தை வழங்கும் தனது பாட்டனாருடன் நூறு ரூபா நாணயத்தாளை தனது எதிர்கால பயணத்திற்கான வழிகாட்டியாக முதலீடு செய்யும் சிறுவன் தொடர்பான விளம்பரம் இலத்திரணியல் ஊடகங்கள் ஊடாக கடந்த காலங்களில் திரையிடப்பட்டமை நாம் அனைவரும் அறிந்த விளம்பரமாகும்.

HNB கிராமின் யாலு சிறுவர் சேமிப்பு கணக்கு, மக்கள் மத்தியில் சென்றடைவதற்காக தயாரிக்கப்பட்ட இந்த வர்த்தக விளம்பரத்தை தொலைக்காட்சி ஊடகங்களில் திரையிட்டமை தொடர்பாக அதன் திரைக்கதை தயாரிப்பாளர் புத்திக திஸாநாயக்க சந்தித்தோம். நாம் கேட்டுக் கொண்டதற்கு அமைய அவர் வழங்கிய நேர்காணலை கீழே தருகின்றோம்.

HNB கிராமின் நிறுவனத்தின் யாலு சிறுவர் சேமிப்பு கணக்கினை அறிமுகப்படுத்த வர்த்தக விளம்பரமொன்றை தயாரிக்குமாறு எமது பிரசார நிறுவனமான “ரேட்ஸ் என்ட் ரோட்ஸ்” விடம் கையளித்த சந்தர்ப்பத்தில் இந்த விடயத்தை எவ்வாறு பொதுமக்களிடம் கொண்டு செல்வது என்ற எண்ணம் எனக்குள் பாரியதொரு பிரச்சினையாக தென்பட்டது. அதிலும் பல்வேறு போட்டி சிறுவர் சேமிப்பு கணக்குகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் யாலு சிறுவர் சேமிப்பு கணக்கை விசேட சிறுவர் சேமிப்பு கணக்காக மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக யாலுவினால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாக எனக்கு தெரிவிக்க வேண்டியிருந்தது. சிறுவர்களிடம் காணப்படும் எண்ணங்கள் பலவற்றில் சிறந்த ஒன்றாக யாலுவுடன் யாலுவாக (நண்பனுடன் நண்பனாக) என்ற விளம்பரம் ஓர் அர்த்தத்தை தருகின்றது. ஐஸ்கிரீம் ஒன்றை குடித்தல், விளையாட்டு பொருளை வாங்குதல் போன்ற விடயங்களை தவிர்த்து சேமிக்கும் நற்பழக்கங்களுடன் நண்பனாகும் சிறுவர்களுக்கு யாலுவினால் கிடைக்கும் நன்மைகளுக்கு மேலதிகமாக பெறுமதிமிக்க பரிசில்களை கிடைக்கும் கதையை நான் முன்வைக்க முயற்சி செய்தேன். புத்திகவின் இந்த கருத்துக்களை தொலைக்காட்சியில் ஒளிப்பதிவு செய்யும் பொறுப்பு என்ட்லெஸ் வேல்ட் (Endless World) இன் மிலான் குரேவுக்கு வழங்கப்பட்டது. மிலானின் மேற்பார்வையில் ரங்க பண்டாரவின் படப்பிடிப்பினால் ஒளிப்பதிவு செய்யப்பட்ட யாலு விளம்பரம் சிறுவன் மற்றும் தாத்தா ஒருவரையும் தேடும் பொறுப்பும் புத்திகவுக்கு இலகுவான விடயமாக இருக்கவில்லை. சிறுவனை தேடும் போது அச்சிறுவன் துடிப்பானவனாகவும் கவர்ச்சியானவனாகவும் இருப்பதுடன் பெரியோரை மதிக்கும் நற்குணமுள்ளவனாகவும் இருக்க வேண்டுமென நினைத்தோம். நாம் நினைத்த சிறுவன் ஒருவன் எமக்கு கிடைத்தான். அவன் சனுக. தாத்தா இந்தத் துறையில் புதியவர் என்பதால் படப்பிடிப்பை பலதடவைகள் செய்ய வேண்டியேற்பட்டது. தாத்தா மிலானிடம் பல தடவைகள் கோபதுக்குக்கு உள்ளான சந்தர்ப்பங்களும் உண்டு. எனினும் அவர் தன்னுடைய பொறுப்பை உணர்ந்து பொறுமையாக இந்த கதாபாத்திரத்தில் நடித்தார் என்று கூறாமல் இருக்க முடியாது. தாத்தாவின் கதாபாத்திரத்துக்கு காமினி உதவி செய்தார். இந்த விளம்பரத்துக்கான காட்சிகளை கொம்பனி வீதி மற்றும் பிலியந்தலை பகுதியில் மேற்கொண்டோம். அந்தக் காலப்பகுதியில் மாம்பழ தட்டுப்பாடு காணப்பட்டதால் மாம்பழங்களை வெளியில் இருந்து கொண்டு வந்து பிளாஸ்டிக் கம்பத்தில் தொங்கவிட்டு மாமரத்தை போல் காட்சிபடுத்தினோம். புத்திக சிரித்தவாறு எம்மிடம் தெரிவித்தார். எவ்வாறாயினும் பலரின் முயற்சியால் சுமார் 45 விநாடிகள் கொண்ட இந்த சிறப்பான விளம்பரத்தை தொலைக்காட்சியில் பார்த்த போதும் இதனை படமாக எடுப்பதற்கு செலவழிக்கப்பட்ட இரண்டு நாட்களும் அதன் பின்னர் ஒரு முழு விளம்பரமாக தயாரித்து தொலைக்காட்சியில் கொண்டு வருவதற்கு உழைத்த தியாகங்கள் பலருக்கு இப்போது மறந்திருக்கலாம்.

ஆக்கம்
தஹம்ஸா திசரங்கி

மற்றவர்களின் அனுபவம் உங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.



# இலங்கையின் வர்த்தக அபிவிருத்திக்கு முயற்சியாண்மையின் முக்கியத்துவம்

1. புதிய உற்பத்திகள் அல்லது தற்போதைய உற்பத்தியை மேலும் விருத்தி செய்வதற்காக வியாபார வாய்ப்புகளை உருவாக்குதல்.
2. நிலம், உழைப்பு மற்றும் மூலதனம் ஆகியவற்றினூடாக வருமானத்தை உயர்த்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் அவர்களிடம் விருத்தியை ஏற்படுத்தல்.
3. முயற்சியாளர் ஆரம்பிக்கும் வர்த்தகத் துறையில் பல கிளை வியாபாரங்களை ஏற்படுத்தல்.
4. சந்தையில் காணப்படும் கடுமையான போட்டிக்கு மத்தியில் இருக்க வேண்டுமானால் நவீன கண்டுபிடிப்புகள் அவசியமாகும். இதன் மூலம் வர்த்தகம் விருத்தியடையும்.
5. சந்தையை விரிவுபடுத்துவதன் மூலம் ஏனைய சேவைகளில் விருத்தி ஏற்படும்.

### முயற்சியாண்மையின் போக்குகள்

- **பெண் முயற்சியாண்மை (Women Entrepreneurship)**
  நவீன கண்டுபிடிப்புகளுக்காக பெண்களை ஈடுபடுத்துதல் என்று பொருள்படும். அழகுக்கலை, முடிவடிவமைப்பு, கேக் தயாரிப்பு போன்ற துறைகளில் பெண்கள் புதுமைகளை ஏற்படுத்த வேண்டுமென்பதே நோக்கமாகும்.
- **சமூக முயற்சியாண்மை (Social Entrepreneurship)**
  சூழல் பாதுகாப்பு, சுகாதாரம், அனர்த்த நிவாரணம் போன்ற துறைகளில் புதுமைகளை கடைப்பிடிக்க வேண்டுமென்பதாகும். மன திருப்தி, சமூக மதிப்பு, அங்கீகாரம், நன்மை போன்ற பிரதிஇலாபங்களை எதிர்பார்த்து இவ்வாறான முயற்சியாண்மை செயற்படும்.
  Eg: வறுமையில் உள்ள மக்களுக்காக எவ்வித பிணையுமின்றி அந்த மக்களை நம்பிக்கையாளராக வைத்து கடன் வசதியை ஏற்படுத்திக் கொடுத்த பங்களாதேஷ் கிராமின் வங்கியின் ஸ்தாபகரும் நோபல் பரிசினை பெற்றவருமான கலாநிதி மொஹமட் யூனுஸ் சமூக முயற்சியாளராகும்.
- **பல்தேசிய முயற்சியாண்மை (Multipreneurship)**
  பாரிய நிறுவனமொன்றில் ஒரே தடவையில் புதுமைகள் பலவற்றை அறிமுகப்படுத்துவதாகும். இதில் பிரதானமாக புதிய வர்த்தகங்கள் ஆரம்பிக்கப்படுவதுடன் அவை பாரிய அளவில் நடைமுறைப்படுத்தப்படுவதை குறிக்கும்.
- **உள்ளக முயற்சியாண்மை (Intrepreneurship)**
  நிறுவனத்துக்குள் விசேடமாக பாரிய அமைப்புகளுக்குள் ஏற்படுத்தப்படும் முயற்சியாண்மை செயற்பாடுகளை இது குறிக்கும். இதில் நிறுவன ஊழியர்களின் கண்டுபிடிப்பினை (Innovation) முன்வைக்க முடியும். புதிய உற்பத்திகளை செய்யும் நிறுவன ஊழியர்களாக அடையாளப்படுத்த முடியும்.

### வர்த்தக முயற்சியில் காணப்படும் பண்புகள்

**வர்த்தக முயற்சியில் காணப்படும் பண்புகளில் பிரதானமாக**

1. **இலாபமீட்டல் அல்லது இலாபமீட்டாமல் நிறுவனத்தை** நடாத்துதல்
   அதாவது இலாபம் பெறல் அல்லது சமூக சேவையை நோக்கமாக கொண்டு வியாபாரமொன்று ஆரம்பித்தல். செஞ்சிலுவைச் சங்கம், சர்வோதய, லயன்ஸ் கிளப் போன்றன சமூக சேவையை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட வர்த்தக நோக்கமல்லா நிறுவனங்களாக எடுத்துக்காட்டலாம்.
2. **சிறிய அடிப்படையில் அல்லது பாரிய அடிப்படையில்**
   பல்தேசிய கம்பனிகள் போன்ற பாரிய கம்பனிகளில் தனிநபர் வியாபாரம் போன்ற சிறிய அடிப்படையிலான வியாபாரங்கள் என்ற அடிப்படையில் ஒழுங்குபடுத்த முடியும்.
3. **தேவைக்கேற்ப புதிய உற்பத்திகளை நடைமுறைப்படுத்தல்**
   தேவை மற்றும் கட்டாயத்தின் அடிப்படையில் புதிய பொருள் அல்லது சேவையை ஆரம்பித்தல்.
4. **பிரதேச, தேசிய அல்லது சர்வதேச ரீதியில்** வியாபித்தல்
   அதாவது கிராமம், பிரதேசம், வலயம் அல்லது சர்வதேச ரீதியாக வர்த்தகத்தை விரிவுபடுத்தல்.



**சந்தகெலும் ஜயதுங்க,**
கணக்காளர்
எச்.என்.பி. கிராமின்

# மென்மையான உணர்வுகளை பதிவுசெய்யும் சுவடு





## விழி எல்லையின் அளவு

பிறக்கும் போதே கைகளின்றி கால்களின் உறுதியால்
நான் வளர்ந்தேன் இவ்வுலகில் உ சில காலம்
இயந்திரத்தின் உதவியால் தடைகளை தகர்த்தி
இவ்வுலகை சுற்றினேன் நான் வழங்கிய கட்டளையால்

கடலில் வாழும் மீனெல்லாம் கலங்காய் மனிதா
என்றுமே இடராய் பசியைக் களையவே
என்னை சமைத்துண் என்குதே மனித
கவலை போக்கவே அனைத்தும் வந்ததே புவியில்

தகவல் - திலின திஸாநாயக்க

## கவிதைச் சாளரம்



எல்லோரும்
நடித்து . . .
நானும் வந்த போது
நாடகமும் முடிந்தது...

அதனால் நான்
பழைய நினைவுகளை மறந்து
புதிதாக ஆரம்பித்தேன் . . .

உநுவன்
கல்கமுவ



### மெஹெவரவுக்கு வாழ்த்து

திட்டமிட்டு அனைவர் வாழ்வின் நலனுக்காக
வழிகாட்டியாக வலம் வரும் விளக்காக
மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு
வெளிவரும் சஞ்சிகையாம் மெஹெவரவுக்கு வாழ்த்து

நான் என்றும் வாழ்த்து கூறுவேன் மெஹெவரவுக்கு
இதனால் என்னுள் எழுந்தது கவி வடிவில்
கடந்த சில நாட்களாக காதலிக்க ஆரம்பித்தேன்
தொடர்ந்து எழுதுவேன் நான் உனக்காக

வளர்ச்சி பெற்ற சஞ்சிகையாக தொடர வேண்டும்
நீண்டநாட்களின் பின் நாம் இணைந்தோம்
கவி எழுதி கண்ணீர் துடைக்கும் எம்மக்களின்
கரங்களில் என்றும் நீ தவழ வாழ்த்துகிறேன் கவி வடிவில்

டீ.ஏ. சாலட் விஜேசிறி
அங்கத்தவர் - ஹொரணை கிளை

### - காவி உடை -

புத்தர் பெருமானின் ஆசிச் செய்தியை
உன் நாவால் கேட்பதற்கு நான்
ஆசைபடுகிறேன் . . .
கனீரென்ற உன் குரலில்
அறிவுரை கேட்க
இரவிராக நான் தவமிருந்தேன்
சிறிய மஞ்சள் நிற ஆடையை
நீ அணிந்து கொண்டு
படிப்டியாக நீ வளர்ந்தாய்
புத்தர் காட்டிய நன்னெறியை
உலகிற்கு எடுத்தியம்ப
உன்வரவால் எம் குடும்பம் கூட்டம்
கூட்டமாக விகாரையில்
தஞ்சமடைந்தனர் உன் போதனையை
தினம் கேட்க
நண்பர், குடும்பத்தை
பிரிந்து நீ சென்றாய்
புத்த பெருமானின்
துறவறம் பூ'ண



புத்தரின் அவதாரமாக நீ வந்தாய்
குறுகிய எண்ணங்களை நீ மறந்து
வழிகாட்டியாய் எம்முன்னே உன் வருகை
விளக்கேந்திய சீமாட்டியாய்
நீ விளங்க வேண்டும் இவ்வுலகில் . . .

எச்.ஜீ.ரி.டி. ஹேவாவசம்
ஜனக பண்டார திஸாநாயக்க
பொலன்னறுவை கிளை

**மனிதனின் இன்ப துன்பங்களுக்கு அடிப்படை புரிந்துணர்வின்மையாகும்.**












# தொழில் புரிவதால் எனது குடும்பத்துடன் நேரத்தை செலவிடுவது மிகவும் குறைவு

**- பத்மசிறி தயாவங்க**
**பதில் பொதுமுகாமையாளர்**

**முழுப் பெயர்:** ரத்நாயக்க முதியன்சலாகே பத்மசிறி தயாவங்க

**பிறந்த திகதி:** ஜுன் 26

**பிடித்த பாடசாலை:** எனது கிராமம் படிவெல, இக்கிராமம் குளியாபிட்டி நகரில் இருந்து 10கி.மீ தூரத்துக்கு அப்பால் உள்ளது. நான் எனது முதல்நிலை கல்வியை பராகெதர மகா வித்தியாலயத்தில் கற்றேன். வீட்டில் இருந்து பாடசாலைக்கு நடந்து செல்லும் தூரம். 6ஆம் ஆண்டு நான் குளியாபிட்டிய மகா வித்தியாலயத்துக்கு சென்று சாதாரண தரம் வரை கற்றேன்.அதன் பின்னர் குளியாபிட்டி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தை கற்றேன். பாடசாலை நாட்களில் நான் மிகவும் சாந்தமான மாணவனாகும். சகல ஆசிரியர்களும் என்னுடன் அன்பாக இருந்தனர். அக்காலப்பகுதியில் டபிள் பிரமோசன் திட்டம் இருந்தது. இறுதியாண்டு பரீட்சையில் பெற்ற புள்ளிகளை அடிப்படையாக வைத்து சிறந்த மாணவனை தெரிவு செய்வதுடன் இரண்டு வகுப்புகள் மேல் சென்று கல்வி பயில முடியும். அதாவது மூன்றாம் வகுப்பில் சித்தியடைந்தால் நான்காம் வகுப்புக்கு பதிலாக ஐந்தாம் வகுப்பில் கல்வி கற்க முடியும். ஒரு தடவை எனது தாத்தாவிடம் உங்கள் பேரனுக்கு இரட்டை பிரமோசன் கொடுக்க முடியுமென்று தெரிவித்த போதும் அவர் அதற்கு சம்மதிக்கவில்லை. எனது பாடசாலை காலத்தில் பராகெதர வித்தியாலயம் மிகவும் பிடித்த பாடசாலையாகும்.

**பாடம்:** இரசாயன விஞ்ஞானம் தவிர்ந்த ஏனைய அனைத்து பாடங்களும் எனது விருப்பமான பாடங்களாகும். நான் உயர்தரத்தில் கணித பிரிவில் கற்றேன். சமகாலத்தில் ஆங்கில பாடத்தையும் விருப்பத்துடன் கற்று வந்தேன்.

**விளையாட்டு:** பாடசாலை நாட்களில் 800, 1500மீற்றர் ஓட்டப் போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளேன். பின்னர் கராத்தே போட்டியிலும் ஆர்வமாக ஈடுபட்டேன். அக்காலப்பகுதியில் என்னுடன் கராதே போட்டியில் பங்குபற்றிய ஒருசிலர் ஜே.வி.பி. கலவரத்தில் கொல்லப்பட்டமையை நினைவுகூறுகிறேன்.

**பாடசாலைக் காலத்தில் எதிர்கால இலட்சமாக இருந்தது :-** எனக்கு அவ்வாறான இலக்குகள் இருக்கவில்லை. அக்காலத்தில் இன்று காணப்படும் தொழில் பிரச்சினை போல அன்றும் இளைஞர்கள் தொழிலின்றி இருந்தார்கள்.

**முதல் தொழிலும் ஆர்வத்துடன் செய்யும் தொழிலும்:** நான் 1978ஆம் ஆண்டு உயர்தரம் கற்றேன். கணித துறையில் நான்கு பாடங்களிலும் நான் சித்தியடைந்திருந்தேன். அப்போது கொமர்ஷல் வங்கி மற்றும் HNB வங்கிகளில் கிளார்க், கெசியர் வேலைவாய்ப்புக்கு விண்ணப்பித்தேன். இரண்டு வங்கிகளிலும் நான் பரீட்சை எழுதிய போதும் எனக்கு கொமர்ஷல் வங்கியிலேயே வாய்ப்பு கிடைத்தது. 1979ஆம் ஆண்டு மாத்தளை கிளையில் தொழில் கிடைத்தது. மாத சம்பளம் 1080ரூபாய். நான் வாடகை வீட்டில் தங்கியிருந்து தொழில் செய்தேன். எனினும் அந்தக் கிளையில் தொழில்புரிய ஆர்வம் இருக்கவில்லை. இதன் போது HNB கிளையில் வாய்ப்பு கிடைத்தது. நான் HNB க்கு ஆர்வத்துடன் சென்றேன். இரத்தினபுரியில் கிளையில் முதல் வேலை செய்யும் வாய்ப்பு கிடைத்தது. 1980ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் 2015ஆம் ஆண்டு வரை HNB யில் கடமையாற்றினேன். நிறுவனத்தில் கீழ் மட்டத்தில் இருந்து வங்கி அதிகாரி, நிறைவேற்று, கிளை முகாமையாளர் சிரேஷ்ட மற்றும் பிரதான முகாமையாளர் உதவி பொதுமுகாமையாளர் வரை உயர் பதவிகளுக்கு செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. இதனை அடைந்து கொள்ள பல்வேறு தியாகங்களை செய்தேன். குறிப்பாக HNB நிறுவனம் நட்டத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த போது இலாபமடைந்த நிறுவனமாக மாற்றியமைத்த நபர்களில் நானும் ஒருவன் என்பதை கூறிக் கொள்கிறேன். இதனால் நான் எனது குடும்பத்துடன் செலவிட்ட காலம் மிகவும் குறைவு. அதிலும் திருமணமாகி 13 வருடங்களாக வீட்டுக்கு வெளியில் இருக்க வேண்டியேற்பட்டது. அவ்வாறு இருந்தும் கொழும்புக்கு இடமாற்றம் பெற்று ஒரு சில வருடங்களில் மீண்டும் தென்மாகாணத்துக்கு பொறுப்பான பிரதேச முகாமையாளர் பதவி கிடைத்தது. எவ்வாறாயினும் நான் HNBஇல் கடமையாற்றிய நாட்கள் மறக்க முடியாது. மிகவும் திருப்தி.

**வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்:** 1992 மே மாதம் 08ஆம் திகதி எனது மகன் பிறந்த தினம். அன்றுதான் எனக்கு முகாமையாளர் பதவி கிடைத்து பொலன்னறுவை கிளை ஆரம்பிக்கப்பட்டது. அங்கு பாரிய விழா. மகன் பிறந்த நேரத்தில் நான் அவ்விடத்தில் இல்லாத போது மனைவி சோகமாக இருப்பது சாதாரண விடயம்தானே.

**வாழ்க்கையில் மிகவும் சந்தோசமான நாட்களும், துக்கமான தினமும்:** வாழ்க்கையில் எனக்கு HNB நிறுவனத்தில் கிளார்க் பதவி கிடைத்த நாட்களும் படிப்படியாக நான் முன்னேறிச் சென்று உதவி பொதுமுகாமையாளர் பதவி கிடைத்த போது அதிக சந்தோசம் அடைந்தேன். மற்றவரின் பிழையால் உயர் அதிகாரியின் ((MD) முகாமைத்துவ பணிப்பாளர்) கோபத்துக்கு உள்ளானேன். அதுவரை நான் யாரிடமும் அந்தளவு ஏச்சு வாங்கியது கிடையாது. அதுவும் நான் செய்யாத தவறுக்கு. நான் தவறு செய்யாத போதும் மௌனியாக இருந்துவிட்டேன். மௌனமாக இருப்பது சாலச் சிறந்ததென நான் மீண்டும் நினைக்கிறேன்.

**கடந்த காலத்துக்கு செல்வதற்கான வாய்ப்பொன்று கிடைத்தால் வாழ்க்கையில் எடுத்துக் கொள்ளும் சிறந்த காலப்பகுதியும் அதற்கான காரணமும்:** பாடசாலைக் காலம். உயர்தரம் கற்ற போது நாம் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் கல்வி கற்றோம். மீண்டும் அந்தக் காலத்துக்கு செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தால் எமது குறைகளை நிவர்த்தி செய்து இதனைவிட நல்லதொரு இடத்துக்கு சென்றிருக்கலாம்.

**வாழ்க்கையில் இழந்த பெறுமதிமிக்க நபர் அல்லது சந்தர்ப்பம்:** எனக்கு எனது தந்தையின் அரவணைப்பு குறைவாகவே கிடைத்தது. எனது வாழ்க்கையில் பக்கபலமாக திகழ்ந்தவர் எனது பாட்டனார் ஆகும். அவர் தான் என்னுடன் இருந்தார். அதன் பின்னர் எனது தொழில் துறையில் பாரிய தூண்டுகோளாக இருந்த நபராக கருதுவது HNB வங்கியின் ரியென்சி விஜேதிலக அவர்கள். அவர் நல்லதொரு தகப்பன், ஆசான், அவ்வாறே நண்பன். அவருடைய வாழ்க்கை எமக்கு நல்ல படிப்பினை. அவர் முன்மாதிரியான நல்ல தலைவர். நான் தொழிலில் இன்று இந்த நிலையில் இருப்பதற்கு முதற் காரணம் அவர்தான். இன்னும் பல வருடங்கள் அவருடன் ஒன்றாக தொழில் புரிந்திருக்கலாம். . .

**மாற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தால் உங்களிடம் காணப்படும் குறைபாடுகள்:** நான் எனது வாழ்நாளில் எனது குடும்பத்துக்காக செலவிட்ட காலம் மிகவும் குறைவு என்ற எண்ணம் இருக்கிறது. நிதி விடயங்களாக இருந்தாலும் சரி குடும்பத்துடனான உறவுகளாக இருந்தாலும் சரி. நான் தொழிலுக்காக அதிகளவாக அர்ப்பணித்துள்ளேன் என்பதையே இது காட்டுகிறது. எனினும் இந்த குறைபாட்டை இன்னும் தவிர்த்துக் கொள்ள முடியாமல் உள்ளது.

**முதல் காதல் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றம்:** சாதாரண தரம் கற்ற போது பெண் ஒருவரை மனதில் நினைத்திருந்தேன். இப்போது அந்தப் பெண்ணை ஞாபகம் இல்லாவிட்டாலும் அது எனது முதல் காதலாகும். இன்றுவரை அந்தப் பெண்ணுக்குத் தெரியாத ஒருதலைக்காதலாக இருந்தாலும் உண்மையாக நேசிக்கும் ஒரு பெண்ணை நான் அண்மையில் மணந்து கொண்டேன். எனது பாடசாலை நண்பியான அவர் இன்று என் மனைவியாக இருக்கிறாள். அவள் இந்திராணி குணதிலக.

**அந்தப் பெண்ணிடம் காணப்படும் சிறப்பம்சம்:** மிகவும் புகழ் பெற்ற பெண்ணாகும். குடும்பத்துக்கு என்னால் செய்ய முடியாத அனைத்தையும் அவள்தான் செய்து வருகிறாள். சுயாதீனமாக சிந்தித்து பலவற்றை சாதிக்கும் பழக்கம் அவளிடம் காணப்படுகிறது. எனது அனைத்து வெற்றிகளுக்கும் அவளின் பங்களிப்பு பாரிய நிழலாக இருக்கிறது.

**வாழ்க்கையில் நீங்கள் திருப்தியடைகிறீர்களா?** பெற்றுக் கொண்டவை எல்லையில்லை.

**வாழ்க்கையில் திருப்புமுனையாக கருதுவது:** உண்மையாகவே நான் செய்யும் தொழில். அது விவாதத்துக்குரியதாக இருக்கலாம். அதுதான் உண்மை. எனது தொழிலில் மீது எனக்கு எல்லையில்லா நம்பிக்கை உண்டு. இன்றும் அவ்வாறுதான். எனது தொழில் வாழ்க்கையில் மூன்று திருப்புமுனைகள் ஏற்பட்டன. பொலன்னறுவை மற்றும் கோட்டை கிளையிலும் தெற்கு பிரதேசத்திலும் நான் பெற்றுக் கொண்ட வெற்றிகளுக்கு இவை நல்லதொரு சந்தர்ப்பமாக அமைந்தன எனலாம்.

**பாடகர்:** விஜயகுமாரதுங்க

**பாடல்:** திருமதி ரூபா இந்துமதியின் "மகே புத்துஹரி ஹபனா"

**திரைப்படம்:** Taken

**நாவல்:** கருணாசேன ஜெயலத் அவர்களின் "கெஹனு லமய்" (பெண் பிள்ளைகள்)

**எதிர்கால இலக்கு:** நான் கடந்த காலத்தில் பலருக்கு உதவி செய்துள்ளேன். எதிர்காலத்திலும் இன்னும் பலருக்கு உதவிகளை செய்து மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்பதே நோக்கமாகும்.


ஆக்கம்
மஞ்சுள ஹெட்டியாராச்சி

**மற்றவர்களின் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியடைவதால் தானும் வெற்றியடையலாம்.**

சுயவிருத்தி (SELF DEVELOPMENT) தொடர்பாக உலகின் முதலாவது நூலாக கருதப்படுவது டெல்கானாவின் HOW TO WIN FRIENDS & INFLUENCE PEOPLE என்ற நூலாகும். இந்த நூல் 1937ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதுடன் சுமார் 34 மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளது. நூல் வெளியிடப்பட்ட நாள் முதல் இன்று வரை சுமார் 78 ஆண்டுகள் கழிந்துள்ள போதிலும் மக்கள் மத்தியில் இன்றும் பிரசித்திபெற்ற நூலாக காணப்படுகின்றது. இந்த நூலின் பிரதிகள் 20,000,000 வரை வெளியிடப்பட்டுள்ளதுடன் உலகின் பல நாடுகளிலும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. டெல்கானா 1955ஆம் ஆண்டு மரணமானார். அவரினால் படைக்கப்பட்ட இந்த நூல் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்டதுடன் எவ்விதம் மக்கள் சுயமாக விருத்தியடைவது என்பது தொடர்பாக மிகவும் ஆக்கப்பூர்வமான பல விடயங்கள் இந்தப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

டெல்கானாவின் HOW TO WIN FRIENDS & INFLUENCE PEOPLE என்ற நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு

# மன ஆறுதலின்றி எடுக்கப்படும் முடிவுகளால் நீங்கள் பலவற்றை இழக்க நேரிடலாம் ...



அமெரிக்காவில் சிவில் யுத்தம் ஆரம்பமானது. லிங்கன் தனது போட்டேமெக் இராணுவ அணிக்கு புதிய ஜெனரால் ஒருவரை நிமித்தார். அவர் ஜெனரால் மீட். இதற்கு முன்னர் ஜெனரால்களினால் லிங்கன் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. அவர்களின் திறமையின்மை சுட்டிக்காட்டிய பொதுமக்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் புதிய ஜெனரல் ஒருவரை நியமிக்குமாறு லிங்கனிடம் கேட்டுக் கொண்டனர். அவ்வாறே நாட்டின் இராணுவத் தளபதியாக மீட்டை நியமிப்பதிலும் பல்வேறு கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன.

முடிவுகளை ஆரம்பத்திலேயே எடுக்க வேண்டாம். முடிவெடுக்க சந்தர்ப்பம் கொடுங்கள். லிங்கனின் புகழை கூறும் ஜெனரல் தான் தெரிவு செய்யப்பட்டமைக்கு எதிராக ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் என்ன என்பது தொடர்பில் அவர் இவ்விதம் கூறினார். முக்கியத்துவம் வாய்ந்த ஹெட்ஸ்பர்க் போர் 1863 ஜுலை ஆரம்பத்தில் மூண்டது. ஜுலை மாதம் 4ம் திகதி கடும் மழை மற்றும் காற்றும் வீசியது. இதனால் லீயின் தலைமையிலான இராணுவம் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்தது. அவர் இராணுவத்துடன் போட்டோமெக் நிலையத்துக்கு மிகவும் சோர்ந்த நிலையில் வருகை தந்தார். வெள்ளத்தில் அடிபட்டவரைப் போன்று கவலை முகத்துடன் வருகை தந்தார். உண்மையாக லீயின் இராணுவம் மீட்டின் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தது. லிங்கன் இதனை கடவுள் தனக்கு வழங்கிய வெகுமதியாக கருதினான். ஏனென்றால் லீயின் இராணுவம் எப்படியாவது தப்பித்து செல்ல வேண்டுமென்று கருதிய போதும் வெள்ளம் அவர்களை தடுத்து நிறுத்தியது. இதனூடாக இந்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் கையாண்டால் லீயின் இராணுவத்தை தோற்கடித்து யுத்த நிறுத்தமொன்றுக்கு செல்ல முடியுமென்பது லிங்கனின் எண்ணமாக இருந்தது. அவ்வாறே லிங்கன் தனது ஜெனரால் மீட்டுக்கு டெலிகிராப் ஊடாக யுத்த நிறுத்தத்துக்கு செல்லாமல் லீயின் இராணுவத்துக்கு எதிராக போர் தொடுக்குமாறு அறிவித்தார். அந்தக் கடிதம் எந்தளவு முக்கியமானது என்றால் லிங்கன் விசேட கையாள் ஒருவரின் ஊடாக அந்த விடயத்தை மீட்டுக்கு தெரியப்படுத்தினார்.

மீட் என்ன செய்தார்? அவர் லிங்கனின் வார்த்தைக்கு எதிராக செயற்பட்டதுடன் தற்போது இடம்பெற உள்ள விடயங்களை யுத்த முனையில் தெரிவித்தார். மீட் இருமனதுடன் யுத்தத்தை இடைநிறுத்தினார். இதனை செய்வதற்கு அவர் பல்வேறு காரணங்களை முன்வைத்தார். விசேடமாக மீட், துன்பப்படும் போது இராணுவத்துக்கு எதிராக யுத்தம் செய்வது இராணுவ ஒழுக்குத்துக்கு எதிரான விடயம் என்பதை சுட்டிக்காட்டினார். இறுதியில் வெள்ளம் வற்றிய பின்னர் லீ தனது இராணுவத்துடன் தப்பித்துச் சென்றுவிட்டார்.

“கடவுளே நாம் என்ன செய்வது? எமக்கு லீயின் இராணுவப் படையை முழுமையாக ஆக்கிரமித்திருக்கலாம். அவர்கள் செத்து மடிவதைத் தவிர வேறொன்றும் இருக்கவில்லை. எந்தவொரு பலவீனமான ஜெனரால்களும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் தமது பதவியை கைவிடுவதே வழக்கமாகும். எனக்கு எனது கரங்களினால் லீக்கு கன்னத்தில் அறைந்திருக்கலாம். அந்த அனைத்தையும் மீட் இல்லாமல் செய்துவிட்டார் . . .”

இந்த சம்பவத்தை லிங்கன் ஏற்றுக் கொள்ளவில்லை. கடும் கோபமடைந்த நிலையில் அரண்மனையில் சத்தமிட்டவாறு இருந்தார். இறுதியில் லிங்கன் தான் கடிதங்கள் எழுதும் மேசையில் ஜெனரல் மீட்டின் செயற்பாடுகளை எதிர்த்து கடிதமொன்றை எழுதுவதற்காக அமர்ந்தார். எனினும் இந்தக் காலப்பகுதியினுள் அவர் மனம் சற்று தளர்ந்து மாற்றமடைந்தது.

அன்பான ஜெனரால் அவர்களே, லீ தப்பிச் சென்ற விடயம் தொடர்பில் நீங்கள் முன்வைத்த காரணங்கள் துரதிஷ்டமான ஒன்று. நான் அதனை ஏற்றுக் கொள்ள மாட்டேன். நாம் அவர்களை வெல்லும் நிலையில் இருந்தோம். நாம் அவர்களை இலகுவாக பிடித்திருக்கலாம். எமது கடந்தகால செயற்பாடுகளை மறந்து யுத்தத்தை முடிப்பதற்கான சந்தர்ப்பம் இருந்தது. இப்போது இருக்கும் நிலையில் யுத்த நிறுத்தத்துக்கான காலம் நிர்ணயிக்கப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த திங்களன்று லீக்கு எதிராக போராட்டம் செய்யாமல் இருந்த நீங்கள் இப்போது ஆற்றின் வலது பக்கத்துக்குச் சென்று அவருக்கு எதிராக போர் செய்வது நினைத்துப்பர்க்க முடியாத விடயம். லீயின் இராணுவத்தில் மூன்றில் இரண்டை பிடித்திருக்கும் வாய்ப்பு இருந்தது. இப்போது உங்களுக்கு யுத்தத்துக்கு மேலாக எதனையும் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கில்லை. எமக்கு கிடைத்த பொன்னான வாய்ப்பை நழுவவிட்டுள்ளீர்கள். இதனால் நான் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளேன். அதுவும் நான் உங்கள் மீது வைத்திருக்க அளவுக்கதிமான நம்பிக்கையினாலாகும். லிங்கனினால் எழுதப்பட்ட இந்த “குற்றச்சாட்டு கடிதத்தை” படித்த பின்னர் ஜெனரால் மீட் என்ன செய்திருப்பார் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? அவர் தனது பதவியை இராஜிநாமா செய்திருக்க வேண்டும்.

எனினும் இந்தக் கடிதத்தை மீட் வாசிக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஏனென்றால் லிங்கன் அதனை தபாலிடவில்லை. இந்தக் கடிதம் அவர் மரணத்தை தழுவிய பின்னரே கிடைத்தது. இந்தக் கடிதம் அவர் எழுதிய கடிதங்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

மீட் தனது எஜமானுக்கு கீழ்ப்படியாமை தொடர்பில் லிங்கன் பின்னர் கடும் கோபத்தில் இருந்தார். ஏனென்றால் பல விடயங்களில் மாற்றம் ஏற்பட்டன. குறிப்பாக இந்த குற்றச்சாட்டு கடிதத்தை மீட்டுக்கு அனுப்பாமல் லிங்கன் மறைத்து வைத்திருந்தமை விந்தையான விடயமாகும். இது தொடர்பில் நாம் ஒருவிடயத்தை உன்னிப்பாக அவதானிக்க வேண்டியுள்ளது. அந்தக் கடிதத்தை எழுதிய பின்னர் ஜன்னல் வழியாக உலகை சற்று பார்த்த பின்னர் முடிவொன்றை எடுத்திருக்கலாம். அவருக்கு இவ்வாறன ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கலாம்.

குழப்பமடைய வேண்டாம். சற்று யோசித்து பாருங்கள். எதுவும் நடக்கலாம். நான் இவ்வாறு நடந்து கொள்வது பிழையாகும். ஆடம்பர மாளிகையில் சகல சுகபோகங்களுடனும் இருந்துக் கொண்டு நான் மீட்டுக்கு கட்டளையிடுவது இலகுவானது. நான் கெட்ஸ்பேர்கில் இருந்திருந்தால் மீட் கடந்தவாரம் பார்த்ததைப் போன்று இரத்த ஆற்றை நானும் கண்டிருக்கலாம். மரணிக்காமல் இருந்தால் காயமடைந்த ஏனைய இராணுவ சிப்பாய்கள் துன்பப்படுவதை பார்த்திருக்கலாம். அவ்விதம் பார்த்தால் மீட்டைப் போன்று நானும் தாக்கப்பட்டிருக்கலாம். சிலவேளை நானும் மீட் எடுத்த முடிவையே எடுத்திருப்பேன். வெள்ளம் வற்றிய நிலையில் லீயின் இராணுவம் தப்பிச் சென்றுவிட்டது. இதனால் நான் இப்போது இந்தக் கடிதத்தை மீட்டுக்கு அனுப்பினால் மீட் எனது கோபத்தை அறிந்து கொண்டிருப்பார். எவ்வாறாயினும் அவர் இப்போது தனது குற்றத்தை நியாயப்படுத்தியுள்ளார். இறுதியில் அவரிடம் இருந்து பெறக்கூடிய நன்மைகளை இந்தக் கடிதத்தினால் இழக்க வேண்டியேற்படலாம். சிலவேளை இந்தக் கடிதத்தை அவர் வாசித்திருந்தால் இராணுவத்தில் இருந்து இளைப்பாறியிருக்கலாம்.”

அநேகமாக லிங்கனால் எழுதப்பட்ட கடிதங்களை ஒருபுறத்தில் வீசுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று அனுமானிக்க முடியும். ஏனென்றால் இந்தக் காலப்பகுதியில் தூற்றுதல் அல்லது ஆர்ப்பாட்டம் செய்தல் என்பன தொடர்பிலான எண்ணங்கள் லிங்கனிடம் காணப்பட்டது. அவை நிச்சயம் இடம்பெறும் என்பது அவருக்கு தெரியும்.

சிங்கள மொழிபெயர்ப்பு
வாசனா லியானாராச்சி



HNB கிராமின் பைனான்ஸ் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்களுடனான நேர்காணலை கீழே தருகின்றோம்



# வியாபார துறையொன்றுக்கு கடன் வழங்கும் போது கடன் வழங்கும் அதிகாரி கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள்

நுண்நிதி வியாபாரமொன்றில் கடன் வழங்குவதற்கு முன்னர் கடன் வழங்கும் அதிகாரியினால் வியாபாரத்தின் தன்மை தொடர்பில் சரியான மதிப்பீடுகளை பெறவேண்டியது அவசியமாகும். இந்த மதிப்பீடுகளை சரியான முறையில் அறிந்து கொள்வதற்கான அடிப்படையான அளவீடுகள் பலவற்றை கடந்த வார இதழில் நாம் குறிப்பிட்டிருந்தோம். இவ்வார இதழில் வியாபாரமொன்றை நடத்துவதற்கு தடையாக இருக்கும் பிரதான காரணிகள் சிலவற்றை கடன் வழங்கும் அதிகாரி அறிந்து வைத்திருக்க வேண்டும். இது தொடர்பாக இவ்வாரம் ஆராயலாம் என்று நினைக்கிறோம்.

**Political**:
வியாபாரத்தில் அரசியல் அழுத்தங்கள் எந்தளவில் காணப்படுகிறது என்பதை கடன் வழங்கும் அதிகாரி அறிந்து வைத்திருத்தல் அவசியமென்பதை இது குறிக்கிறது. குறிப்பாக அரசியல் காரணங்களால் இந்த வியாபாரத்துக்கு ஏதேனும் இடையூறுகள் காணப்படுகிறதா அல்லது வியாபாரத்தை தொடர்ந்தும் நடத்தும் போது ஏதேனும் தடைகள் ஏற்படுமா என்பது தொடர்பில் ஏதேனும் வழியில் தேடிப்பார்க்க வேண்டியது அவருடைய கடமையாகும்.

**Economic** :
பொருளாதார பிரச்சினை. அதாவது, வர்த்தகத்துடன் தொடர்பில் நாட்டின் நிலைப்பாடு, சுதந்திரமாக வியாபாரத்துடன் தொடர்புடைய மூலப்பொருட்கள் அல்லது இயந்திரங்கள் என்பவற்றுக்கு விதிக்கப்படும் வரி, இதற்கான ஒதுக்கீடுகள் வியாபாரத்தை தொடர்ந்து நடத்துவதில் இதன் தாக்கங்கள் என்ன என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

**Social**:
வியாபாரத்தினால் ஏற்படக்கூடிய சமூகப் பிரச்சினைகள். தற்போது நடத்தும் வியாபாரத்தினால் ஒலி, சுவாசம், மற்றும் நீர் என்பன மாசடைவதற்கான சந்தர்ப்பங்கள் உண்டா, இதனால் பொதுமக்களுக்கு ஏதேனும் அசௌகரியம் ஏற்படுமா போன்ற விடயங்கள் தொடர்பில் கடன் வழங்கும் கவனம் செலுத்த வேண்டும்.

**Technology**:
தற்போது நடைபெறும் வியாபாரத்தில் எந்தளவு தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன, அந்த தொழில்நுட்பங்களை கையாளும் திறன் வர்த்தக உரிமையாளரிடம் காணப்படுகிறதா அல்லது இது தொடர்பில் நல்ல திறமைவாய்ந்த ஒருவரை எதிர்பார்த்துள்ளரா என்பதையும் ஆராய வேண்டும்.

**Legal**:
வியாபாரத்துடன் தொடர்புடைய சட்டங்கள் எவ்விதம் கையாளப்படுகின்றன. அதாவது சட்டரீதியாக நடைபெறும் வியாபாரமா அதனை நடத்திச் செல்லும்போது சட்டத்தினால் ஏதேனும் தடைகள் அல்லது அழுத்தங்கள் வியாபாரத்தில் எவ்வித தாக்கம் செலுத்தும் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

**Environment**:
சூழல் பாதிப்புகள் வியாபாரத்தில் தாக்கம் செலுத்தும் முறை தொடர்பில் ஆராய வேண்டும். உதாரணமாக மணல் அகழ்தல், மண் வெட்டுதல் போன்ற சூழல் காரணங்கள் வியாபாரத்தில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பில் ஆய்வு செய்ய வேண்டும்.

**Competitor**:
வியாபாரத்துடன் தொடர்புடைய ஏனைய போட்டியாளர்கள். கடன் பெறுபவர் ஆரம்பிக்க எதிர்பார்க்கும் வியாபாரம் மற்றும் ஏற்கனவே சந்தையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா அல்லது போட்டி நிறுவனத்துடன் கடன் பெறுபவர் போட்டியிடும் அளவுக்கு புதிய நுட்பங்களை கையாளும் தகுதியுடையவரா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அவ்வாறே போட்டியிடும் வலு மற்றும் திட்டங்கள் அவருடைய வியாபாரத்தில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும்.

**Plan**:
வர்த்தக விருத்தி தொடர்பில் வர்த்தகரிடம் காணப்படும் நீண்டகால மற்றும் குறுங்கள் திட்டங்கள் காணப்படுகின்றதா? திட்டங்கள் இன்றி செயற்படும் ஒரு வர்த்தக நிலையத்தில் இலாபத்தை எதிர்பார்க்க முடியாது.

**Attitude**:
வர்த்தகம் தொடர்பில் வர்த்தகரின் மனநிலையுடன் அவரின் குடும்ப பங்களிப்பு எவ்விதம் தாக்கம் செலுத்துகிறது என்பது தொடர்பில் வர்த்தகரின் எண்ணங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாகும். உதாரணமாக பெண் ஒருவரினால் ஆரம்பிக்கப்படும் வியாபாரத்துக்கு அந்தப் பெண்ணின் கணவரின் அனுமதி மறுத்தால் அல்லது அவர் பங்களிப்பு செய்யாமல் இருந்தால் வியாபாரத்தின் வளர்ச்சி தொடர்பில் நாம் சற்று ஆழமாக சிந்திக்க வேண்டும்.

## வியாரமொன்றை ஆரம்பித்தல் Business Startup

நபர் ஒருவர் வியாபாரமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது வியாபாரமொன்றுக்கான அடிப்படை திட்டங்களை வகுத்தல் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். வர்த்தகரினால் வியாபாரத்துக்கான கடனை பெறும் இந்த நிமிடத்தில் எமக்கு வியாபாரம் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கும் அதன் தன்மையை அளவீடு செய்வதற்கும் தரவுகள் முழுமையாக இல்லாத போதும் கடன் வழங்கும் அதிகாரி ஒரு சில தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கடன் வழங்கும் அதிகாரியினால் கடனை வழங்குதல் அல்லது கடனை வழங்காமல் விட்டுவிடுதல் தொடர்பில் தீர்மானிக்க வேண்டிய நபராக இருக்கிறார். இது தொடர்பில் அவர் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு சில விடயங்கள் இருக்கின்றன. இதனை morfa என்று அழைக்கப்படுகிறது.

### Morfa


**Market** -
கடனை எடுக்கும் நபர் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ள வியாபாரம் சந்தையில் எந்தளவு கிராக்கி காணப்படுகிறது. அந்த வியாபாரத்தில் விலையை எவ்விதம் நிர்ணயிப்பார், வியாபார நிலையம் அமைந்துள்ள இடம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனை பௌதீக வளங்கள் அவருடைய வியாபார நிலையத்தை ஆரம்பிக்கும் போது ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பில் கடன் வழங்கும் அதிகாரி முழுமையான ஆய்வுகளை செய்ய வேண்டும்.

**Objectives**:
இவரினால் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ள வியாபாரம் ஆறு மாதம், ஒரு வருடம், ஐந்து வருடம் என்ற அடிப்படையில் வியாபாரத்துக்கான செலவினம், வருமானம் திரட்டல் மற்றும் வியாபாரத்தை நடத்துவதற்கான ஆற்றல் என்பன தொடர்பில் கடன் வழங்கும் அதிகாரி அவதானத்தை செலுத்த வேண்டும்.

**Resource**:
வியாபாரத்தை நடத்துவதற்காக அவரிடம் காணப்படும் திறன்கள் மற்றும் அவருடைய ஏனைய அனுபவங்கள். உதாரணமாக, வியாபாரத்துக்கு ஏனைய ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமாக இருந்தால் அந்த ஊழியரிடம் பயிற்சி பெற்ற ஊழியர்கள் கடமை புரிகிறார்களா? பயன்படுத்தும் இயந்திரங்கள் எவ்வகையானவை? வியாபாரத்தை நடத்துவதற்கு உள்ளாந்த ரீதியிலும் வெளியிலும் அவர் வலுவுடையவராக இருக்கிறாரா போன்ற காரணங்கள் தொடர்பில் கடன் வழங்கும் அதிகாரி கவனம் செலுத்தத வேண்டும்.

**Financially**
நிதியின் அடிப்படையில் வியாபாரத்தினால் எதிர்பார்க்கும் இலாபம் மற்றும் கிடைக்கும் இலாபம் எவ்வளவு, இவ்வகையான ஏனைய போட்டி நிறுவனங்கள் பெறும் இலாபம் எவ்வளவு, இதற்காக எவ்வகையான அளவில் விநியோக செயற்பாடுகள் இடம்பெறுகின்றன, எந்தளவு செலவு ஏற்படுகிறது போன்ற விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

**Ability & Commitment**
கடனுக்கு விண்ணப்பிக்கும் நபர் வியாபாரத்துக்கு கொடுக்கும் முன்னுரிமை மற்றும் அவர் இதற்காக எந்தளவு தியாகங்களை செய்ய முடியும், கடன் விண்ணப்பதாரியின் ஆளுமை, பண்புகள் என்பன வியாபாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் போன்ற மனிதப் பண்புகளை கடன் வழங்கும் அதிகாரி அறிந்து வைத்திருக்க வேண்டும். அவ்வாறே, கடன் வழங்குவதற்கு முன்பு தீர்மானம் எடுத்தல் மற்றும் ஆய்வு செய்தல் என்பன கடன் வழங்குவதற்கு முன்னர் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களாக இருக்கின்றன.




நாம் எதிர்பார்க்கும் நபர் மற்றவர்களிடம் இருந்து கிடைக்கமாட்டார்.







# HNB கிராமின் இம்முறை



















எச்.என்.பி.கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட் ஊழியர் நலன்புரி சங்கம் மற்றும் விளையாட்டு சங்கம் இணைந்து வருடாந்தம் நடத்தும் HNB கிராமின் சவால் கிண்ண மாபெரும் கிரிக்கட் போட்டியின் இறுதிப் போட்டி செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதி கொழும்பு 07 புளூம்பீல்ட் விளையாட்டு மைதானத்தில் ஒரு நாள் முழுவதும் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. பிரதேச ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 20 கிரிக்கட் அணிகளும் தலைமைக்காரியாலய இரண்டு அணிகளும் போட்டியிட்ட இச்சுற்றுப் போட்டியில் HNB கிராமின் சவால் கிண்ண போட்டியில் HNB கிராமின் காலி கிளை இம்முறை கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இதேவேளை இரண்டாமிடத்தை HNB கிராமின் அம்பாறை கிளையினால் சுவீகரித்துக் கொள்ள்பட்டமை விசேட அம்சமாகும். போட்டியின் ஆட்டநாயகன் மற்றும் தொடர் ஆட்ட நாயகன் விருதினை காலி கிளையின் ஜனேஷ் பெற்றுக் கொண்டார். சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதினை அம்பாறை கிளையின் எச்.ஆர்.எம். இஸ்மத் பெற்றுக் கொண்டதுடன் சிறந்த களத்தடுப்பாளருக்கான விருதினை காலி கிளையின் ரவிந்து பெற்றுக் கொண்டார். கிரிக்கட் போட்டிகளுக்கு அப்பால் ஆண் பெண் இருபாலாருக்குமான நூறு மீற்றர் ஓட்டப் போட்டி, பெலூன் உடைத்தல் போட்டி, நகைச்சுவையாக பேசும் போட்டியும் சுவாரஸ்யமாக இடம்பெற்றதை காணக்கூடியதாக இருந்தது. கடந்த வருடத்தைப் போன்று இவ்வருடமும் என்.என்.பி.கிராமின் சவால் கிண்ண மாபெரும் கிரிக்கட் போட்டி வெகு சிறப்பாக நடைபெற்ற அதேவேளை எச்.என்.பி.கிராமின் அழகுராணி மற்றும் அழகுராஜா தெரிவு செய்யும் போட்டியும் நடைபெற்றமை விசேட அம்சமாகும்.

என்.என்.பி.கிராமின் நிறுவன ஊழியர்களிடையே நட்புறவு மற்றும் சிறந்த ஒழுங்கமைப்பை இப்போட்டிகளின் ஊடாக அவதானிக்க முடிந்தமை விசேட அம்சமாகும். வருடாந்தம் நடைபெறும் இப்போட்டியில் மிகவும் சிறப்பாக ஒழுங்கு செய்யதமை பாராட்டுக்குரிய விடயமாகும். அவ்வாறே, எச்.என்.பி.கிராமின் குழுவினரின் அர்ப்பணிப்பு இறுதிப்போட்டியின் முடிவில் காணக்கூடியதாக இருந்ததாக எச்.என்.பி. கிராமின் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளரும் நிறைவேற்று

# சவால் கிண்ணம் காலி கிளைக்கு














அதிகாரியுமான சமிந்த பிரபாத் தெரிவித்தார்.

போட்டியின் எதிர்பார்ப்புமிகு பரிசில்கள், கேடயங்கள் வழங்கும் நிகழ்வில் எச்.என்.பி.கிராமின் முகாமைத்துவப் பணிப்பாளரும் நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத், உபதலைவர் பீ. பிரேமலால், பணிப்பாளர் திருமதி சந்தமினி பெரேரா, பணிப்பாளர் திருமதி கிரிசாந்தி தம்பையா ஆகியோர் பிரதான அதிகாரிகளாக கலந்து கொண்டனர்.
































# HNB கிராமின் சேமிப்பு, முதலீட்டுக்கான வாய்ப்பை எமக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறது

## வெற்றிக் கொடியின் அருகில்



நான் திருமணம் முடித்து கந்தளாய் பிரதேசத்துக்கு வருகை தந்து நான்கு வருடங்கள் ஆகின்றன. நான் எனது கணவருடன் ஆராய்ந்து வீட்டிலேயே புத்தகக் கடையொன்றை ஆரம்பித்தோம். எனது கணவர் கந்தளாய் நகரில் புத்தகக் கடையொன்றை நடத்தி வருவதால் எனக்கு வியாபாரம் தொடர்பில் நல்ல அனுபவம் இருந்தது. நான் கிராமின் நிறுவனத்தில் 2015 ஆகஸ்ட் மாதம் இணைந்து கொண்டேன். அதுவும் HNB கிராமின் சேமிப்பு கணக்கொன்றை ஆரம்பித்த காரணத்தினால். நல்ல வட்டி வீதத்துடன் நாமறிந்த ஒரு நிறுவனமாக காணப்படுவதும் எமக்கு இங்கு சிறந்த சேவையும் கிடைக்கிறது. பணத்தை வைப்பிலிடுவதற்கும் நாம் நிறுவனத்துக்கு செல்ல வேண்டியதில்லை. கிராமின் நிறுவன உத்தியோகத்தர்கள் எம்மிடம் வந்து வைப்பிலிடவேண்டிய பணத்தை பெற்றுக்கொண்டு ரசீதும் அவ்வேளையிலேயே தருகின்றனர்.

கிராமின் நிறுவன சேமிப்பு கணக்கில் தொடர்ச்சியாக பணத்தை வைப்பிலிடுவதால் எவ்வித பிணையுமின்றி நான் வியாபாரமொன்றை ஆரம்பித்த போது 50,000ரூபா பணம் சுவசக்தி கடன் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ள முடிந்தது. அந்தப் பணத்தின் மூலம் நான் நிறுவனத்துக்கு தேவையான உபகரணங்களை வாங்கினேன். நான் நிறுவனத்தில் இருந்து கொண்டு வரைபடங்கள் கீறுவது எனது பொழுதுபோக்காக இருப்பதால் அதுவும் தற்போது மேலதிகமாக வருமானமாக இருக்கிறது. முதலாவது சுவசக்தி கடன் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து இரண்டாவது தடவையாக 100,000ரூபாவை பெற்றுக் கொண்டேன். எமது சேமிப்புக்கேற்ற திட்டமாக காணப்படுவதால் சுவசக்தி கடன் திட்டம் கடன் பெறுவது இலகுவானது என்பதுடன் எமது சேமிப்புக்கும் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

**கே.பி. நில்மினி விஜேவர்தன**
**சேனநாயக்க வீதி, கந்தளாய்.**

## பெற்றுக்கொள்ளும் கடனை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்தால் வாழ்க்கையில் வெற்றி பெறுவது கஷ்டமான விடயமல்ல



நான் 2004ஆம் ஆண்டு முதல் கிராமின் நிறுவனத்தின் வாடிக்கையாளராக இருக்கிறேன். ஆரம்பத்தில் நான் சிரட்டை கரண்டிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்து வந்தேன். அதன் பின்னரே கருங்கல் வெட்டும் தொழிலை ஆரம்பித்தேன். இங்கு பகல் நேரத்தில் வேலை செய்வது இலகுவான விடயமல்ல. இதனால் மாலை நேரத்தில் கருங்கல் வெட்டுவதும் பகல் வேளையில் சிரட்டை கரண்டி செய்வதும் வழமையாகும். இவ்வியாபாரத்தை நடத்துவதற்கு எமக்கு HNB கிராமின் பல வகையில் உதவிகளை வழங்கியது. நாம் வெட்டும் கற்களை வாங்குவதற்கு எமது நிலையத்துக்கு வருகிறார்கள். சிரட்டை கரண்டியை நாம் சந்தைக்கு சென்றே விநியோகிக்கின்றோம். கிராமின் நிறுவனத்தில் நான் 30,000ரூபா முதல் 60,000 ரூபா வரை கடன் பெற்றுள்ளேன். பெற்றுக்கொள்ளும் கடனை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்தால் வாழ்க்கையில் வெற்றி பெறுவது கஷ்டமான விடயமல்ல.

**தில்ருக்ஷி இனோகா பிரேமதாஸ பேரமடுவ, அக்போபுர.**

## வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு தேவையான பங்களிப்பு கிராமின் நிறுவனத்தில் கிடைக்கிறது



நான் கடந்த பன்னிரண்டு வருடங்களாக கிராமின் நிறுவன வாடிக்கையாளராக இருக்கிறேன். ஆரம்பத்தில் 5,000, 10,000ரூபா கடனைப் பெற்று எனது வியாபாரத்தை முன்னெடுத்து வந்தேன். படிப்படியாக எமது வியாபாரம் வளர்ச்சியடைந்து இன்று சிறிய சாப்பாட்டு கடையொன்று ஆரம்பிக்கப்படும் வகையில் எமது வியாபாரம் வளர்ச்சியடைந்துள்ளது. அவ்வாறே நான் பலசரக்கு கடையையும் தொடர்ந்து நடத்தி வருகின்றேன். சாப்பாட்டு ஓடர்களும் ஏற்றுக் கொள்ளப்படும். HNB கிராமின் திரிய கடன் திட்டமானது நபர்களுக்கிடையில் பிணை வைத்துக் கொள்வதால் விரைவாகவும் எவ்வித கஷ்டமின்றியும் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும். திரிய கடன் திட்டம் பிணையாளி, சொத்துக்களை காண்பிக்க முடியாத எம்போன்றவர்களுக்கு மிகவும் இலகுவான கடன் திட்டமாகும். பலவருடங்களாக நாம் கிராமின் நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு நம்பிக்கையும், இலவான திட்டங்களுமே காரணமாகும். இப்போது நான் 70,000ரூபா கடனைப் பெற்று எனது வியாபாரத்தை மேலும் விஸ்தரிக்க முடிந்துள்ளது. வியாபாரத்தை மேலும் விரிவுபடுத்துவதே எனது நோக்கமாக இருப்பதுடன் அதற்கான சகல உதவிகளும் கிராமின் நிறுவனத்தினால் கிடைக்கிறது.

**பில்டா ஹெட்டியாராச்சி.பாதிய கிராமம், கந்தளாய்.**

## கைத்தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு HNB நிறுவனத்தினால் எமக்கு தீர்வு கிடைக்கிறது



பொலன்னறுவை மீனவக் கிராமத்தில் வாழ்க்கை நடத்தும் குடும்பங்களில் எண்பது வீதமான மக்கள் பராக்கிரம சமுத்திரத்தையே அண்டி வாழ்வதுடன் இந்தச் சமுத்திரத்தை நம்பியே இருக்கின்றனர். குளத்து மீன், குளத்து கருவாடு உற்பத்தி என்பனவே இவர்களின் பிரதான வாழ்வதார தொழிலாக இருக்கின்றது.

பராக்கிரம குளத்தில் வலை வீசி மீன்பிடி தொழிலில் ஈடுபடும் தமயந்தி, கிராமின் நிறுவனத்தில் கடந்த ஓராண்டு காலமாக கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டு வருகிறார்.

பராக்கிரம குளத்தில் பல வருடங்களாக மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருவதுடன், ஆண்களின் உதவியுடன் மாலை நேரத்தில் பராக்கிரம குளத்தில் வலைகளை வீசிவிட்டு காலை வேளையில் அதனை மீண்டும் எடுப்போம். பிடிக்கப்படும் மீன்களில் ஒரு பகுதியை விற்பனை செய்வதுடன் மிகுதியாக உள்ளவற்றை கருவாட்டுக்காக எடுத்துக் கொள்கிறோம். நாம் இத்தொழிலுக்கு தேவையான உபகரணங்களுடன் தோணியை பராமரிப்பதற்கும் பணம் தேவைப்படுகிறது. இதற்கான பணத்தை திரட்டுவதில் HNB கிராமின் நிறுவனம் பக்கபலமாக இருக்கிறது. இக்கிராமத்தில் உள்ள பெரும்பான்மையான மக்கள் கிராமின் நிறுவனத்தின் நிரந்தர வாடிக்கையாளர்களாக உள்ளனர். கடனை இலகுவாக பெற்றுக் கொள்வதுடன் HNB கிராமின் நிறுவனத்தில் மனநிறைவுடன் சேவையை பெற்றுக் கொள்கிறோம்.

**ரோஸ் தமயந்தி**
**மீனவக் கிராமம், பொலன்னறுவை.**

**எந்த விடயத்திலும் குறைபாடுகளை தேடுவது, அவதானிப்பது உங்களை தோல்விக்கே இட்டுச் செல்லும்.**



# HNB கிராமின் கிளையின் செயற்பாடுகள்

## வர்த்தக நோக்கங்களுக்கு அப்பால் சென்று மனிதநேய பண்புகளுடன் நாம் செயற்பட வேண்டியுள்ளது . . .

### HNB கிராமின் கந்தளாய் கிளை

கந்தளாய் நகரில் கிராமின் நிறுவன கிளை 2004ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இல.35, பிரதான வீதி கந்தளாய் என்ற முகவரியில் செயற்பட துவங்கிய இக்கிளையானது கிராமின் கிளை வலையமைப்பில் 24 கிளையாகும். இக்கிளையின் முதலாவது பிரதானியாக கெலும் திலங்க இருந்தார். கிளையின் செயற்பாடுகளை நாம் அறிந்து கொள்ள பொருத்தமான நபராக இவர் திகழ்ந்தமையால் நாம் அவரை நேர்காணல் செய்தோம்.

நான் 2003 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி கிராமின் நிறுவனத்தில் வெளிக்கள உத்தியோகத்தராக இணைந்து கொண்டேன். சில காலத்தில் எனக்கு பொலன்னறுவை கிளையின் வெளிக்கள முகாமையாளர் பதவு உயர்வு கிடைத்தது. அங்கு நான் மூன்று மாதங்களே தொழில் புரிந்தேன். கந்தளாய் கிளையில் வெளிக்கள முகாமையாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதால் நான் அங்கு இணைந்து கொண்டேன். 2009 மார்ச் மாதமளவில் எனக்கு கந்தளாய் கிளையின் முகாமையாளர் பதவி கிடைத்தது.

ஆரம்பத்தில் குறுக்குவீதியில் அமைந்திருந்த கந்தளாய் கிளையானது அதன் பின்னர் 58/G, பிரதான வீதியில் 2013 நவம்பர் மாதம் 5ஆம் திகதி முதல் செயற்பட ஆரம்பித்தது. ஐம்பதுக்கு ஐம்பது என்ற சராசரியில் சிங்கள, தமிழ் மக்கள் கந்தளாய் நகரில் வாழ்ந்து வருகிறார்கள். அவ்வாறே முஸ்லிம்களும் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகிறார்கள். இப்பிரதேச மக்களில் பெரும்பான்மையானோர் விவசாய தொழிலை செய்கிறார்கள். அதிலும் நெல் உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்குகிறார்கள். எனினும் சனத்திரளில் குறைவான பிரதேசமாகும். பல இடங்களில் பரந்து வாழும் தன்மை காணப்படுகிறது.

விவசாயத்துக்கு மேலதிகமாக கடற்றொழிலில் ஈடுபடும் குடும்பங்கள் கந்தளாய் வாவிக்கு அருகில் வாழ்ந்து வருகிறார்கள். அவ்வாறே, தயிர் உற்பத்தியானது ஒவ்வொரு குடும்பத்திலும் விவசாயத்துக்கு மேலதிகமாக காணப்படுகிறது. கந்தளாய் கிளையின் மத்திய நிலையங்களாக செயற்படும் பிரதேசங்களாக கந்தளாயில் இருந்து தம்லகமுவ, கல்ஓய, சேருநுவர, மூதூர் போன்ற பிரதேசங்களை மட்டுப்படுத்தியதாக பரவலாக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் வாழும் மக்களில் பெரும்பான்மையானோர் விவசாயத் தொழிலில் ஈடுபடுவதால் கடன் தவணைப்பணத்தை நெல் அறுவடை காலப்பகுதியில் செலுத்த முடியுமாக இருந்தால் இலகுவாக இருக்கும். ஏனென்றால் நெல் அறுவடை காலத்தில் மாத்திரமே மக்களின் கரங்களில் பணம் புழக்கத்தில் இருக்கிறது. திரிய கடன் திட்டத்துக்கு பதிலாக ஈஸிலோன், அபிலாஷ, சுவசக்தி போன்ற கடன் திட்டங்களுக்கு இப்பிரதேசத்தில் நல்ல வரவேற்பு காணப்படுகிறது.

நாம் எமது வாடிக்கையாளருக்கு கடன் வழங்கும் சேவைக்கு மேலதிகமாக அவர்களின் வர்த்தக செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான ஆலோசனை, பயிற்சி போன்றவற்றை வழங்குவதுடன் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். அவ்வாறே, எமது கிளை ஊழியர்களின் நாளாந்த கடமையை சிறப்பாக மேற்கொள்வதற்கு தேவையான வழிகாட்டல்கள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை தொடர்ந்து வழங்கி வருகிறோம். அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கு தொடர்பாக ஒவ்வொரு நாளும் மாலை ஒரு மதிப்பீட்டை செய்கிறோம். இலக்கினை அடையாமல் இருக்கும் ஊழியர்கள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்தி இலக்கினை அடைவதற்கான வழிகாட்டல்களை நாம் வழங்குகிறோம். இவ்வாறானதொரு வேலைத்திட்டத்தின் மூலம் நாம் எமது நீண்டகால நோக்கினை அடைந்து கொள்வதற்காக செயற்படுவதுடன் நிதி நிறுவனங்களுடன் காணப்படும் போட்டியையும் வெற்றிகரமாக முகம் கொடுக்கிறோம். இவ்வாறான சகல செயற்பாடுகள் மூலம் ர்டே கிராமின் நிறுவனத்தின் முதல் பத்துக்குள் வரவேண்டுமென்பது எமது ஊழியர்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.



HNB கிராமின் கந்தளாய் கிளை உத்தியோகத்தர்கள்

| நிலையங்களின் எண்ணிக்கை | அங்கத்தவர் எண்ணிக்கை | ஊழியர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் அளவு ரூ. |
|---|---|---|---|
| 111 | 2980 | 18 | ரூபா. மி. 622 |

**ஆக்கம் -**
**மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி**
**படப்பிடிப்பு -**
**லக்ஷ்மன் குமாரதுங்க**



ரி. ஸ்ரீகாந்தன்
பிரதேச முகாமையாளர்



அஜித் பிரியன்த
பிரதேச கணக்காளர்



கெலும் திலங்க
கிளை முகாமையாளர்



சரித் சுரங்க
கிளை
உதவி முகாமையாளர்



பிரதீப் சஞ்சய
சிரேஷ்ட நிறைவேற்று
நிதி மற்றும் நிர்வாகம்



பீ. மயூரன்
உதவி முகாமையாளர்
நுண்நிதி

**எமக்கு ஏற்படும் சகல தடைகளும் வெற்றியின் ஆரம்பம்.**

# HNB கிராமின் நிறுவன ஊழியர்களின் மலேசியாவுக்கான நான்கு நாள் சுற்றுப்பயணம்





HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட் தமது ஊழியர்களுக்காக ஒவ்வொரு வருடமும் ஏற்பாடு செய்யும் வெளிநாட்டு பயணங்கள் நான்காவது தடவையாகவும் வெற்றிகரமாக இடம்பெற்றது. ஆகஸ்ட் மாதம் 17,18,19ஆம் திகதிகளில் சுமார் 111 ஊழியர்கள் மலேசியாவுக்கு நான்கு நாள் சுற்றுலாப்பயணத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஊழியர்களின் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தைப் போன்று வாழ்க்கையில் கிடைத்த மறக்க முடியாத சம்பவங்களாக இருக்க வேண்டுமென்பதற்காக HNB கிராமின் பைனான்ஸ் நிறுவனம் இவ்வாறான சுற்றுலாப்பயணங்களை ஏற்பாடு செய்கிறது. நிறுவனத்தின் முழுமையான அனுசரணையில் நான்கு நாட்களுக்கான தங்குமிட வசதி, உணவு என்பவற்றுடன் மலேசியாவின் புகழ்பெற்ற இடங்களை பார்வையிடுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டன. அவ்வாறே மலேசியாவில் நுண்நிதித் துறை செயற்படும் விதம் தொடர்பாக அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பமும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. குறிப்பாக மலேசியாவின் Amanah Ikhtiar Malaysia என்ற நுண்நிதி நிறுவனத்தின் செயற்பாடுகளை அறிந்து கொள்வதற்காக ஒரு நாள் ஒதுக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக மலேசியாவின் சன்வே லகூன் (Sun way lagoon) பூங்கா மற்றும் மலேசியாவின் கோலாலம்பூர் நகரத்தின் சர்வதேச அனுபவம் என்பன மலேசிய சுற்றுப்பயணம் சென்றவர்களுக்கு வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாத சம்பவங்களாக இருக்குமென்பதில் சந்தேகமில்ல. நிறுவனத்தின் வளர்ச்சிக்காக என்றும் அர்ப்பணிப்புடன் செயற்படும் தமது ஊழியர்களுக்காக மேலும் மேலும் பல்வேறு சலுகைகளை HNB கிராமின் பைனான்ஸ் நிறுவனம் வழங்கி வருகின்றது. நிறுவனத்தின் நீண்டகால வளர்ச்சிக்கு ஊழியர்களின் திருப்தி பிரதான இடம் வகிக்கின்றது. அவ்வாறே, நிறுவனத்தில் தொடர்ந்து பணிபுரிவதற்கான சூழல் மற்றும் மிக விரைவில் முதல் மூன்று நான்காம் இடத்தில் HNB கிராமின் பைனான்ஸ் நிறுவனத்தை கொண்டு வருவதை நோக்கமாக கொண்டு செயற்படுவதாக HNB கிராமின் பைனான்ஸ் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் பிரதான நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்கள் மலேசிய சுற்றுப் பயணத்தின் பின்னர் மெஹெவரவுக்கு தெரிவித்தார்.










# சித்திரக் கலை நண்பர்கள்

சிறுவர்களின் கைவண்ண பகுதி

“சித்திர கலை நண்பர்கள்” வரைதல் பகுதி எச்.என்.பி. கிராமின் உத்தியோகத்தர் களுக்கானது என்பதுடன் உங்கள் பிள்ளைகளின் படைப்புகள், ஆக்கங்களை பிரசுரிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. “சித்திர கலை நண்பர்கள்” பகுதியில் பிரசுரிக்கப்படும் **சிறந்த மூன்று படைப்புகளுக்கு சிலோன் பென்சில் நிறுவனத்தினால் (எட்லஸ்) பெறுமதிமிக்க பரிசுக் குவியல்கள் மூன்று வழங்கப்படுவதுடன்** நீங்கள் வரைந்து அனுப்பும் தாளின் பின்பகுதியில் எட்லஸ் அல்லது ஹொம்ரன்பஸ் கலர் பெட்டியின் இலட்சினையை ஒட்டி அனுப்பவும். உங்கள் பிள்ளைகளின் ஆக்கங்களை, படைப்புகளை பிரசுரித்து இதன் அனுகூலங்களை பெற்றுக் கொள்ளுங்கள். **உங்கள் பிள்ளைகளின் படைப்புகளை பதிப்பாசிரியர், கைவண்ணப்பகுதி, எச்.என்.பி.கிராமின் கட்டிடம், இல. 168, நாவல வீதி, நுகெகொடை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**



பெரியோருக்கு உதவி செய்வோம்
நேத்ரா அபிமானி திஸாநாயக்க – தரம் 6
(நிட்டம்புவ கிளை)



மான் கூட்டம்
இசுக அமோத்யா த அல்விஸ் - தரம் 2
(பிரியந்த அல்விஸ் - தலைமையகம்)



எமது பாடசாலை சிரமதானம்
தினதி இமாஷா அபேசேகர – தரம் 3
(ரோஹன அபேசேகர – வெலிமடை கிளை)



எனது கனவு கார்
கேமிக ஹிம்சர அபேவிக்ரம – தரம் 3
(சுரங்க அபேவிக்ரம – தலைமையகம்)



புத்தர் தியானம்
செதிக ஓமேத் - தரம் 2
(ஓசான் பெரேரா – தலைமையகம்)



எனது வீடு
எம். அகுஷா சசினி குமாரதுங்க – முன்பள்ளி
(எம். அமல் பிரகீத் - ஹம்பாந்தோட்டை கிளை)



மழை பெய்கிறது
எம்.ரி. உதுல் புத்மின தந்திரிகே – தரம் 2
(புத்திக தந்திரிகே – தலைமையகம்)



வனாந்தரம்
எம்.கம்ஷா ஒசனி குமாரதுங்க – தரம் 2
(எம்.அமல் பிரகீத் - ஹம்பாந்தோட்டை கிளை)

## ஜுலை – ஆகஸ்ட் குறுக்கெழுத்து வெற்றியாளர்கள்

HNB கிராமின் மெஹெவர சஞ்சிகையின் ஜுலை ஆகஸ்ட் இதழ்களில் வெளிவந்த குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றிபெற்ற வெற்றியாளர்கள் கீழே தரப்பட்டுள்ளனர். சதீபா வெளியீட்டாளர்களினால் வழங்கப்படும் ரூபா 3000 பெறுமதியான புத்தகப் பைகள் வெகு விரைவில் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். எமது வாழ்த்துக்கள்.



ஷானிகா மதுஷானி
ஹொரனை கிளை



எச். சுரேன்
அவிசாவளை கிளை



டிஷான் சமிந்த
தலைமையகம்

## ஜுலை-ஆகஸ்ட் இதழில் சித்திரங்கள் வரைந்து பரிசு பெற்ற சிறுமிகள்

“Atlas சித்திரக் கலை நண்பர்கள்”



கே.எல். தெரிமி நதாஷா பெரேரா



எஸ்.ரி. பெம்லா செவிமி விஹங்ஷா



இனுகி சலின்ஷா

மெஹெவர கடந்தவார இதழில்கள் இரண்டிலும் சித்திரங்கள் வரைந்து தெரிவு செய்யப்பட்ட சித்திரங்கள் வரைந்த சிறுவர் சிறுமியருக்கு அட்லஸ் நிறுவனத்தினால் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசுகளைப் பெற்ற சிறுவர்களைப் படத்தில் காணலாம். இதேவேளை, HNB கிராமின் நிறுவன சகல ஊழியர்களின் பிள்ளைகளும் **“அட்லஸ் சித்திர நண்பர்”** பகுதிக்கு ஆக்கங்களை வரைந்து அனுப்புமாறு நாம் உங்களை அன்பாய் வேண்டுகிறோம்.

**வாழ்க்கையில் தொடர்ச்சியாக சந்தோஷம் இருக்குமாக இருந்தால் அதுவே வெற்றியாகும்.**

# மனித உணர்வுக்கு மதிப்பளித்த அந்த நாள்...

## மறக்க முடியாத நினைவுகள்

மறக்க முடியாத நினைவுகள். . . இன்று முதல் நாம் ஆரம்பித்துள்ள புதிய ஆக்கமாகும். உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற மிகவும் சுவாரஸ்யமான சம்பவங்கள் மறக்க முடியாத ஞாபகங்கள் மெஹெவர சஞ்சிகையில் பிரசுரிக்க எதிர்பார்த்துள்ளோம். எழுதி அனுப்ப முடியாதவர்கள் 0710292120 என்ற இலக்கத்துக்கு அழைப்பினை ஏற்படுத்தி தெரியப்படுத்தவும் முடியும். உங்கள் அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதே எமது நோக்கமாகும்.

வறுமையில் வாழும் மக்களுக்கு விடிவை ஏற்படுத்தும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்டதே நுண்நிதி கடன் திட்டமாகும். வறுமையில் சிக்குண்டு பசியின் கொடுமையினால் நீரைப் பருகி வயிற்றை நிரப்பும் மக்கள் வாழும் இப்பூமியில், வயிற்றுப் பசிக்கு ஒருநேரமாவது நன்றாக சாப்பிட்டு தற்காலிக தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு பதிலாக மற்றவர்களிடம் கையேந்தி வாழாமல் நீண்டகால தீர்வாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதே கிராமின் திட்டத்தின் நோக்கமாக இருக்கின்றது. இந்த நோக்கத்தில் கடந்து வந்த காலத்தில் நாம் பெற்ற அனுபவங்கள் மற்றும் துயரங்கள் ஏராலம். வறுமைக்கு மத்தியில் வாழ்க்கை நடத்தி அதிலிருந்து வெற்றி பெறுவதற்காக அடைந்த இன்ப துன்பங்கள் தொடர்பில் எமது நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகத்தரான வெலிமட கிளையின் திலக் பந்துல அவர்கள் வாழ்க்கையில் பெற்ற அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் நாமும் படிப்பினை பெறலாம் என்பது திண்ணமாகும்.

வெலிமட கிளையின் ஊடாக செயற்படும் லுணுவத்த மத்திய நிலைய அங்கத்தவர் ஒருவரின் வீட்டுக்கு தவணைப் பணத்தை அறவிடுவதற்காக நான் சென்றிருந்தேன். அவர் தவணைப் பணத்தை சில தவணைகளாக திருப்பி செலுத்துவதில் ஏற்பட்ட தாமதே இதற்கு காரணமாகும். மிருக வளர்ப்புக்காக கடன் பெற்றிருந்த அந்த அங்கத்தவரின் கணவர் திடீர் சுகயீனம் காரணமாக வீட்டின் பொறுப்புகளை தன் தலையில் சுமக்க வேண்டிய கட்டாய நிலைக்கு அவர் தள்ளப்பட்டிருந்ததே தவணைப் பணத்தை திருப்பி செலுத்துவதில் சிரமப்பட்டிருந்தார்.
நான் வீட்டுக்குச் சென்ற போது புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அவரின் கணவருடன் நிலத்தில் அமர்ந்துக் கொண்டிருந்தார். புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தால் எந்தவொரு வேலையும் செய்ய முடியாத நிலையில் இருந்தார்.
தேயிலைத் தோட்டத்தில் கிடைக்கும் சிறிய வருமானத்தின் ஊடாக மூன்று பிள்ளைகள் உட்பட ஐவர் நாளாந்த ஜீவனோபாயத்தை மேற்கொண்டு வந்தனர். கணவரின் நோய்க்கு மருந்துகளை எடுப்பதற்கு பணம் இல்லாத போது வீட்டிலுள்ள தளபாடங்களை விற்பனை செய்தே பெற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர்.
பகல்வேளையில் நான் அவர்களின் வீட்டுக்குச் சென்ற போது தன் இளைய மகளுடன் சுருண்டு படுத்திருந்த அவரிடம் நான் வினவிய போது அவள் சுகவீனமாக இருப்பதாக தெரிவித்தார். ஒரே நேரத்தில் அனைவரும்
நோய்வாய்ப்பட்டிருப்பார்களா என்பது எனக்குள் சந்தேகத்தை ஏற்படுத்தியது. இது தொடர்பில் நான் அவரிடம் தொடர்ந்து வினவிய போது அவரின் கண்களில் இருந்து கண்ணீர் ததும்ப பேச ஆரம்பித்தார். இவ்வளவு காலமும் மனதில் பூட்டி வைத்திருந்த அவளுடைய சோகத்தை தெரிவிக்க யாருமில்லாமல் திடீரென்று நான் கேட்டதும் கண்ணீர் மல்க கதறினாள். கடந்த மாதம் கொழுந்து பறிக்கச்சென்று கிடைத்த 790ரூபா பற்றுச்சீட்டை அவருடைய கணவர் என்னிடம் காண்பித்தார். நாங்கள் இந்தப் பணத்தின் மூலம் எவ்வாறு வாழ்க்கை நடத்துவது என்று என்னிடம் திருப்பி கேட்டபோது கீழே படுத்துறங்கிக் கொண்டிருந்த பாலகனின் நிலையை என்னால் அறிந்து கொள்ள கூடியதாக இருந்தது. வாழ்க்கையில் வறுமை என்பது ஒரே நேரத்தில் வந்திருப்பதை முதல் தடவையாக நான் அவதானித்தேன்.
அதன் பின்னர் நான் காரியாலயத்துக்கு வருகை தந்து முகாமையாளர் மற்றும் எனது சக ஊழியர்களிடம் நடந்த சம்பவத்தை கூறியவுடன் அனைவரும் கவலையடைந்தார்கள். இந்தச் சம்பவம் என்னை மிகவும் கவலைக்குள்ளாகிய விடயமென்பதால் தான் சகலருக்கும் அறிவிக்கிறேன். அதன் பின்னர் எமது காரியாலயம் முகாமையாளர் உட்பட உத்தியோகத்தர்கள் அனைவரும் இந்தக் குடும்பத்துக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று ஒதுதலைப்பட்சமாக முடிவெடுத்தோம். மற்றவர்களின் துன்பத்தில் நாங்களும் இணைந்து கொள்ள வேண்டுமென்ற தார்மீக கடமைப்பாட்டுக்கு அமைய செயற்படும் கிராமின் ஊழியர்களினால் அந்தக் குடும்பத்துக்கு சுமார் 13,000ரூபா திரட்டி அந்தக் குடும்பத்துக்கு அன்பளிப்பு செய்தோம். அவ்வாறே அந்தக் குடும்பத்துக்கு தேவையான உலர் உணவுப் பொருட்களும் வாங்கிக் கொடுத்த அந்த சம்பவத்தை எனது வாழ்வில் என்றும் மறக்க முடியாது. நாங்கள் வழங்கிய அந்த பிஸ்கட் பெட்டியை அச்சிறுவர்கள் அந்தப் பொழுதில் மகிழ்ச்சியுடன் சாப்பிட்ட போது அவர்களின் உள்ளம் எந்தளவு சந்தோசமடைந்திருக்குமோ அந்தளவு நாங்களும் மனமகிழ்ச்சி அடைந்தோம். நாம் வழங்கிய அந்த உலர்உணவுப் பொருட்கள் இன்னும் ஓரிரு நாட்களில் முடிவடைந்துவிடும். ஆனால், இன்னும் பல வருடங்களுக்கு நாம் மனமுவந்து செய்த அந்த உதவிகள் உள்ளத்தில் இருந்து அகலாது என்பதை நினைவுகூறுகிறோம்.









நாங்கள் வழங்கிய அந்த பிஸ்கட் பெட்டியை அச்சிறுவர்கள் அந்தப் பொழுதில் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து சாப்பிட்ட போது அவர்களின் உள்ளம் பூரிப்படைந்ததை கண்டோம். அந்த நினைவுகள் என்மனதில் இன்றும் நிலைத்திருக்கிறது.

வெலிமடை கிளையின் திலக் பந்துலவின் நினைவுகள்
எழுத்தாக்கம் - மஞ்சுளா

*தளத்திலிருந்து . . . .*

## உங்களுக்கு தெரியுமா?

ONLINE DO YOU KNOW?



ரயிலுக்கு முன்னாள் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொள்ளும் நபர்களின் குடும்பத்தினரிடம் இருந்து ஜப்பான் அரசாங்கம் தண்டப் பணம் அறவிடுகின்றது.

## உங்களுக்கு தெரியுமா?

ONLINE DO YOU KNOW?



ஜப்பானில் வீடில்லாமல் இருக்கும் நபர்கள் 24மணி நேரமும் திறந்திருக்கும் Internet cafe யில் தான் உறங்குகிறார்கள். மாதாந்தம் வாடகைப் பணம் செலுத்துவதற்கு பதில் இது இலாபம் என்பதாலாகும்.

## உங்களுக்கு தெரியுமா?

ONLINE DO YOU KNOW?



ஜப்பானில் வருடாந்தம் 1500இற்கும் மேற்பட்ட பூமியதிர்வுகள் இடம்பெறுகின்றன. எதிர்கொள்கின்றது.

## உங்களுக்கு தெரியுமா?

ONLINE DO YOU KNOW?



ஜப்பானில் 50,000 இற்கும் மேற்பட்ட மக்கள் 100 வயதை அடைந்தவர்களாக இருக்கின்றனர்.

## உங்களுக்கு தெரியுமா?

ONLINE DO YOU KNOW?



வேலைத்தளங்களில் குட்டித்தூக்கம் போடுவதற்கு ஜப்பானில் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் மேலும் சிறந்த சேவையை பெற்றுக் கொள்ள முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அறிவு வளர்ச்சிக்கும் – பரிசில்களை வென்றிடவும் மெஹெவர குறுக்கெழுத்து

போட்டி இல. 03

அதிஷ்டசாலிகள் மூவருக்கு சதீபா வெளியீட்டாளர்களினால் 3000 ரூபா பெறுமதியான புத்தக கட்டளைகள் வழங்கப்படும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 ஸ் | ■ | 3 |
| | ■ | ■ | 8 | | | ■ | |
| 4 ச | | 5 | 7 ல் | ■ | | ■ | |
| | ■ | | | ■ | | ■ | |
| | ■ | | | ■ | | ■ | |
| ■ | ■ | 6 ன் | | | ■ | 9 யு | |
| 11 க | | | | ■ | 10 | | |
| 12 | | | தி | ■ | 13 | | ■ |

**இடமிருந்து வலமாக . . .**

1. உலகில் கைகளின்றி விமானம் ஓட்டிய பெண்
4. கிராமின் குறுக்கெழுத்து இலவச புத்தக கட்டளை வழங்கும் நிறுவனம்
6. கிராமின் நிறுவனத்தில் பிணையில்லாது பெறக்கூடியது (தலைகீழ்)
8. வாடிக்கையாளரிடம் பெற்ற பணத்தை . . . வைக்க வேண்டும்.
9. காற்று
10. மாலைநேர உணவு வகை
11. மீன் சேர்த்து தயாரிக்கும் உணவு வகையொன்று
12. குற்றவாளியென தீர்ப்பு வழங்குபவர்
13. கிராமின் நிறுவன சிறுவர் சேமிப்பு கணக்கு

**மேலிருந்து கீழ்**

1. யேசுநாதர் பிறந்த இடமென கருதப்படுவது
2. HNB கிராமின் நிறுவனத்தினால் சேமிப்பு கணக்குக்கு வழங்கும் கடனின் பெயர்
3. “கிராமின்” எண்ணக்கருவின் தந்தையென வர்ணிக்கப்படுவர்
5. சிறுகுழந்தை
6. கிராமின் நிறுவனத்தில் முதலீடு செய்தால் கிடைப்பது (தலைகீழ்)
7. கிராமின் எண்ணக்கருவில் வியாபார வெற்றியின் முக்கியமான பகுதி

பெயர்: ........................ ஊழியர் இலக்கம்: ..........
கிளை : ........................
குறுக்கெழுத்து போட்டியில் கலந்து கொண்டவரின் பெயர்:
உறவு முறை :......................
திகதி : ........................ கையொப்பம் .....................

மெஹெவர குறுக்கெழுத்துப் போட்டியானது இவ்வார இதழில் காணப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த சஞ்சிகையை முழுமையாக வாசிப்பதன் மூலம் இதற்கான விடையை இலகுவாக கண்டுபிடிக்கலாம். HNB கிராமின் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியுமென்பதுடன் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் இந்தக் கூப்பனை பூர்த்தி செய்து எமக்கு அனுப்பி வைக்கவும். இவர்கள் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு சதீபா புத்தக வெளியீட்டாளர்களினால் பெறுமதி வாய்ந்த புத்தக கட்டளைகள் வழங்கப்படும். உங்கள் விடைகளை அடுத்த மாதம் மூன்றாம் வாரத்துக்கு முன்னர் “மெஹெவர குறுக்கெழுத்து, எச்.என்.பி.கிராமின், இல. 168, நாவல வீதி, நுகெகொடை” என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சதீபா

- புத்தக வெளியீட்டாளர்
- புத்தக நிலையம்
- அச்சு நிறுவனம்
- அச்சகம்

பிரசித்திபெற்ற பௌத்த, இலக்கிய மற்றும் கல்வி புத்தக வெளியீட்டாளர்

Sole Agent in Sri Lanka
PELANGI
Penerbitan Sdn. Bhd.
Malaysia.

சிறுவர்களுக்கு ஆரம்பத்தில் இருந்து சரளமாக ஆங்கிலம் கற்பதற்காக மலேசியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட Phonics புத்தகம்

வ/ப. சதீபா வெளியீட்டாளர்கள்
SADEEPA PUBLISHERS (PVT) LTD
1060, மருதானை வீதி, பொரளை.

தொ : 011-2686114, 2694289, 2678043
பெக்ஸ் : 011-2678044
Email : sadeepapub@gmail.com

எமது சோம்பேறித்தனமே அன்றி செய்ய முடியாத ஒன்றுமில்லை.

# சிறுவர் தினத்தை முன்னிட்டு HNB கிராமின் நிறுவனத்தினால் பொலன்னறுவை குடாவெவ வித்தியாலயத்துக்கு அன்பளிப்புகள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு HNB கிராமின் நிறுவனத்தினால் 2016 செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதியன்று பொ/திபு/குடாவெவ வித்தியாலய சிறுவர் சிறுமியர் பார்த்து மகிழ்வதற்காக LED தொலைக்காட்சி, அகராதி இயந்திரம், பாடசாலை புத்தகங்கள் மற்றும் வாசிகசாலை புத்தகங்கள் என்பன அன்பளிப்பு செய்யப்பட்டன.

அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த சிறிய கஷ்டப் பாடசாலைக்கு பெயர்பலகை திறந்து வைக்கும் சமகாலத்தில் இடம்பெற்றது. மிகவும் குறைந்த வசதிகளுடன் நடைபெற்று வரும் இந்த ஆரம்ப பாடசாலையில் சுமார் 90 மாணவ, மாணவிகள் கல்வி கற்கின்றனர். அந்த மாணவ, மாணவிகளுக்காக "யாலு" சிறுவர் சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கும் நிகழ்வும் இங்கு நடைபெற்றது. பாடசாலை அதிபர் ஏ.ஜி. பந்துல ரூபசிங்க அவர்கள் இங்கு உரையாற்றுகையில், தமது பாடசாலைக்கு உபகரணங்களும் உதவிகளும் ஒரு நிறுவனத்தினால் முதற்தடவையாக கிடைக்கப் பெற்றதாக தெரிவித்தார். இம்மாணவர்களின் பெற்றோர் வறுமைக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் இதனால் பாடசாலையின் அபிவிருத்திக்கு அவர்களால் உதவி செய்ய முடியாதெனவும் குறிப்பிட்டார். அடுத்த வருடம் தாம் வேறொரு பாடசாலைக்கு இடமாற்றலாகி செல்லவுள்ளதாக தெரிவித்த அவர், தம்மால் முடிந்தவரை இப்பாடசாலைக்கு முடிந்தவரை உதவிகளை பெற்றுக் கொடுப்பதே நோக்கமொன்றும் தெரிவித்தார். இவ்விதம் தமது பாடசாலையின் அபிவிருத்திக்காக HNB கிராமின் வழங்கிய நன்கொடையை அவர் இதயபூர்வமாக ஏற்றுக் கொண்டதுடன் தமது உரையிலும் நிறுவனத்தினை நினைவுகூர்ந்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பி.எம்.டி.சீ. பிரபாத், மாணவர்களுக்கு பெறுமதியான புத்தகங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததாக குறிப்பிட்டார். வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு கல்வியைத் தவிர வேறெதுவும் கிடையாது என்று தெரிவித்த அவர், எதிர்காலத்திலும் இப்பாடசாலைக்கு உதவிகளை வழங்குவதற்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். அவ்வாறே, நாடளாவிய ரீதியில் காணப்படும் கஷ்டப் பாடசாலைகளுக்கு கைகொடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவத்தார்.

HNB கிராமின் நிறுவனத்தின் மேலுமொரு சமூக சேவை வேலைத்திட்டத்தின் ஓரங்கமான இந்நிகழ்வில் HNB கிராமின் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சமிந்த பிரபாத் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன், ஏனைய அதிதிகளாக பிரதி பொது முகாமையாளர் பிமல் செனவிரத்ன, உதவி பொது முகாமையாளர் பெதும் சம்பத் குரே ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.













## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது சிறுவர்கள்

இவ்வருடம் நடைபெற்ற தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் HNB கிராமின் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களின் பிள்ளைகள் பலர் இம்முறை சித்தியடைந்துள்ளனர். HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட் சகல ஊழியர்களின் சார்பில் அவர்களை மனதார பாராட்டுவதுடன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவ, மாணவிகளின் ஆனந்த தோற்றத்தினை கீழே தருகின்றோம்.



**எச்.எம்.எச். தேவிந்தி**
**173 புள்ளிகள்**
(திரு. எச்.எம். அஜித் அசோக - பொலன்னறுவை)



**டபிள்யு.ஏ.சமோத்**
**170 புள்ளிகள்**
(திரு. டபிள்யு.ஏ.கே. பிரியன்க - கண்டி)



**ஆர்.எம்.வினுஜி**
**170 புள்ளிகள்**
(திரு. ஆர்.எம். மஹிந்த தலைமையகம்)



**ரி.எச்.சிதுமின**
**161 புள்ளிகள்**
(திரு. ரி. சுனந்த தலைமையகம்)

HNB GRAMEEN மெஹெவர
எச்.என்.பி.கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட்
இல. 16, நாவல வீதி
நுகேகொடை.
தொ.பே.: 011 2176262 பெக்ஸ்: 011 2 825843
மின்னஞ்சல்: manjula.p@hnbrameen.lk
இணையம்: www.hnbgrameen.com

மேற்பார்வை: சமிந்த பிரபாத்
முகாமைத்துவ பணிப்பாளர் / நிறைவேற்று அதிகாரி
பிரதம ஆசிரியர் : மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
பக்கவடிவமைப்பு: சிந்தக (அர்ஜுன கிரபிக்ஸ்)
அச்சு: அர்ஜுன கிரபிக்ஸ், ரத்னபிட்டிய
படப்பிடிப்பு : லக்ஷ்மன் குமாரதுங்க

## Happy Birthday

ஒக்டோபர் - நவம்பர் மாதங்களில் பிறந்த நாளைக் கொண்டாடும் எச்.என்.பி.கிராமின் நிறுவன சகோதார ஊழியர்களுக்கு எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

| பெயர் | திகதி | கிளை |
|---|---|---|
| திரு. சுசந்த சந்திரசிறி | ஒக்டோபர் 25 | குருநாகலை |
| திரு. கயான் மதுசங்க | ஒக்டோபர் 25 | கண்டி |
| திரு. கனில் பெரேரா | ஒக்டோபர் 26 | தலைமையகம் |
| திரு. பிரியன்த குமார | ஒக்டோபர் 26 | நுவரெலியா |
| திரு. கீத் கனுஷ்க | ஒக்டோபர் 28 | திஸ்ஸமஹராம |
| திரு. சுரம்ய புஷ்பக | ஒக்டோபர் 28 | புத்தளம் |
| திரு. நுவன் சமீர | ஒக்டோபர் 28 | சிலாபம் |
| திரு. சஞ்சீவ ஹெட்டியாராச்சி | ஒக்டோபர் 28 | அனுராதபுரம் |
| திரு. யசின்த தில்ருக் | ஒக்டோபர் 28 | பண்டாரவளை |
| திரு. பீ. கவினாத | ஒக்டோபர் 28 | மட்டக்களப்பு |
| திரு. ரோஹித இந்திக பீரிஸ் | ஒக்டோபர் 29 | மொரட்டுவை |
| திரு. கவிந்து காஞ்சன | ஒக்டோபர் 29 | நகரக்கிளை |
| திரு. சசிந்து சுதேஷ் | ஒக்டோபர் 29 | காலி |
| திரு. திலிப்குமார | ஒக்டோபர் 29 | நுவரெலியா |
| திரு. பிரியந்த டி அல்விஸ் | ஒக்டோபர் 30 | தலைமையகம் |
| திரு. சுரங்க தர்ஷன ஹேரத் | ஒக்டோபர் 30 | மதவாச்சி |
| திரு. ராஜன் நிஷாந்தன் | ஒக்டோபர் 30 | வவுனியா |
| திரு. எம். நவசந்திரன் | ஒக்டோபர் 30 | மன்னார் |
| திரு. ஷெஹான் சங்கல்ப | ஒக்டோபர் 30 | புத்தளம் |
| திரு. திலின மதுசங்க | ஒக்டோபர் 31 | பதுளை |
| திரு. சமீர பிரியதர்ஷன | ஒக்டோபர் 31 | பதுளை |
| திரு. தரிந்து குணவர்தன | ஒக்டோபர் 31 | சிலாபம் |
| திரு. புத்தி பியரங்கன | ஒக்டோபர் 31 | மாத்தளை |
| திரு. திலிப் நுவன் | ஒக்டோபர் 31 | சிலாபம் |
| திரு ரஜித குமார | ஒக்டோபர் 31 | குருநாகலை |
| திரு. சத்துர பிரதீப் | ஒக்டோபர் 31 | அவிசாவளை |
| திரு. பிரதீப் குமார ஜெயவர்தன | நவம்பர் 01 | நாவலப்பிட்டி |
| திரு. மொஹமட் சப்ராஸ் | நவம்பர் 01 | பொத்துவில் |
| திரு. பிரதீப்குமார | நவம்பர் 01 | பெலியத்தை |
| திரு. எஸ் நிருபன் | நவம்பர் 01 | கிளிநொச்சி |
| திரு. சஞ்சீவ சத்துரங்க | நவம்பர் 02 | நகரக்கிளை |
| திரு. தனுஷ்க நதீஷான் | நவம்பர் 02 | சிலாபம் |
| திரு. ஜே சுயந்த் | நவம்பர் 03 | வவுனியா |
| திரு. எம் பிரசாத் | நவம்பர் 03 | முல்லைத்தீவு |
| திரு. மதுசங்க திஸாநாயக்க | நவம்பர் 03 | மத்துகம |
| திரு. தமிந்த ரத்னாயக்க | நவம்பர் 03 | பதவிய |
| திரு. பிரசாந்த சம்பத் | நவம்பர் 03 | புத்தளம் |
| திரு. ஹஸான் மதுசான் | நவம்பர் 03 | அம்பலாங்கொடை |
| திரு. பீ. திலகரத்ன | நவம்பர் 04 | நிக்கவரெட்டி |
| திரு. லஹிரு பிரனீத் | நவம்பர் 04 | கம்பஹா |
| திரு. என் தனுராஜ் | நவம்பர் 04 | கல்முனை |
| திரு. சந்தருவன் ஜயரத்ன | நவம்பர் 05 | நாவலப்பிட்டி |
| திரு. நடராஜ் சுரேஷ் | நவம்பர் 05 | வவுனியா |
| திருமதி கோகிலா சஞ்சீவனி | நவம்பர் 05 | தம்புள்ளை |
| திரு. கே. பரமேஷ்வரன் | நவம்பர் 05 | நெல்லியடி |
| திரு. அகில சதுரங்க | நவம்பர் 05 | நகரக்கிளை |
| திரு. சுதேஷ் பெரேரா | நவம்பர் 06 | தலைமையகம் |
| திரு. குமார விதானகே | நவம்பர் 06 | ஹம்பாந்தோட்டை |
| திரு. ரஜித பெரேரா | நவம்பர் 06 | மொரட்டுவை |
| திரு. ரசிக சாந்த | நவம்பர் 06 | மொரவக்க |
| திரு. ஜே. நிரோஷன் | நவம்பர் 06 | வவுனியா |
| திரு. இஷார மதுசங்க | நவம்பர் 06 | வத்தளை |
| திரு. திமுது திலீப | நவம்பர் 06 | தலைமையகம் |
| திரு. மெலன்க மைக்கல் | நவம்பர் 06 | பதுளை |
| திரு. குமார ரத்னாயக்க | நவம்பர் 07 | காலி |
| திரு. சமீர சம்பத் | நவம்பர் 07 | நிக்கவரெட்டி |
| திரு. சமோத்த அனுராத | நவம்பர் 07 | நிட்டம்புவ |
| திரு. கயான் உதயலால் | நவம்பர் 07 | கம்பஹா |
| திரு. டிலான் தரங்க | நவம்பர் 07 | ஹோமாகம |
| திரு. திலின மதுஷான் | நவம்பர் 07 | சிலாபம் |
| திரு. தனுஷ்க சத்துரங்க | நவம்பர் 08 | நகரக்கிளை |
| திரு. சமித் யசின்த | நவம்பர் 08 | மத்துகமை |
| திரு. சமில ஹர்ஷபிரிய | நவம்பர் 09 | பண்டாரகம |
| திரு. சமிந்த திஸாநாயக்க | நவம்பர் 09 | கல்கமுவ |
| திரு. அஜித் கருணாரத்ன | நவம்பர் 09 | பொலன்னறுவை |
| திருமதி. இந்துனில் குமாரி | நவம்பர் 09 | நிக்கவரெட்டி |
| திரு. எஸ். யாலகன் | நவம்பர் 09 | நெல்லியடி |
| திரு. சந்தன குமார | நவம்பர் 10 | மத்துகம |
| திரு. சஹன் மதுரங்க | நவம்பர் 10 | நிட்டம்புவ |
| திரு. நிலன்த ரத்னாயக்க | நவம்பர் 11 | கல்கமுவை |
| திரு. சசி துமிந்த | நவம்பர் 11 | கந்தளாய் |
| திரு. என். அரவிந்தன் | நவம்பர் 11 | நெடுங்கேணி |
| திரு. சானக ஜயதிஸ்ஸ | நவம்பர் 12 | தலைமையகம் |
| திரு. இந்திக பண்டார | நவம்பர் 12 | பொலன்னறுவை |
| திரு. சமீர பிரசங்கீத் | நவம்பர் 12 | ஹோமாகம |
| திரு. சுரேஷ் சேனநாயக்க | நவம்பர் 12 | ஜாஎல |
| திரு. எஸ். டெனிக்ஷான் | நவம்பர் 12 | கல்முனை |
| திருமதி. நிஷானி மதுஷ்கா | நவம்பர் 13 | ஹோமாகம |
| திரு. ஏ.டி.எம்.அனுருத்திக | நவம்பர் 13 | பதவிய |
| திரு. தனுஷ்க மதுரங்க | நவம்பர் 13 | மொனராகலை |
| திரு. எஸ். உலகேஷ்வரன் | நவம்பர் 13 | மட்டக்களப்பு |
| திரு. தில்ருவன் கோசல | நவம்பர் 13 | மஹியங்கனை |
| திரு. ராசலிங்கம் அலஹேந்தரன் | நவம்பர் 13 | கல்முனை |
| திரு. சந்தன கயான் | நவம்பர் 14 | வத்தளை |
| திரு. சானக நிரோஷன் | நவம்பர் 14 | தலைமையகம் |
| திரு. சஞ்சீவ வீரசிங்க | நவம்பர் 14 | ஹம்பாந்தோட்டை |
| திரு. துஷார திலின | நவம்பர் 15 | தலைமையகம் |
| திரு. ஆர்.ஏ. பிரபாத் | நவம்பர் 15 | பொலன்னறுவை |
| திரு. சத்துரங்க மகேஷ் | நவம்பர் 15 | மதவாச்சி |
| திரு. ருவன் சம்பத் | நவம்பர் 15 | பண்டாரகம |
| திரு. சாரக மாதிவில | நவம்பர் 15 | மாத்தறை |
| திரு. மிலான் சாமிக்க | நவம்பர் 16 | அம்பலாங்கொடை |
| திரு. நிமேஷ் பெர்ணாந்து | நவம்பர் 16 | மொரட்டுவை |
| திரு. மஞ்சுள கமகே | நவம்பர் 16 | நொச்சியாகம |
| திரு. நெவில் செல்வகுமார் | நவம்பர் 16 | நுரைச்சோலை |
| திரு. பீ. நிரோஜன் | நவம்பர் 16 | மன்னார் |
| திரு. அருண வசந்த | நவம்பர் 17 | தலைமையகம் |
| திரு. கே. விநாயகமூர்த்தி | நவம்பர் 17 | வவுனியா |
| திருமதி. ஷானிக மதுஷானி | நவம்பர் 17 | ஹொரனை |
| திரு. கசுன் கல்ஹார | நவம்பர் 17 | களுத்துறை |
| திரு. வீ. விஸ்வலிங்கம் | நவம்பர் 17 | கல்முனை |
| திரு. அகில சந்தருவன் | நவம்பர் 17 | ஹம்பாந்தோட்டை |
| திரு. ஜயந்த வீரசிங்க | நவம்பர் 18 | மஹியங்கனை |
| திரு. பிரதீப் ரத்னாயக்க | நவம்பர் 18 | ஹோமாகம |
| திரு. பீ. சங்கீத் | நவம்பர் 18 | அம்பாறை |
| திரு. கிஹான் திஸாநாயக்க | நவம்பர் 18 | பதுளை |
| திரு. நிமேஷ் சமன் | நவம்பர் 18 | பதவிய |
| திரு. மலித் காவிந்த | நவம்பர் 18 | மதவாச்சி |
| திரு. சமிந்த பிரதீப் | நவம்பர் 19 | எம்பிலிபிட்டி |
| திரு. சுராஜ் மதுசங்க | நவம்பர் 19 | பெலியத்தை |
| திரு. சந்து வீரசிங்க | நவம்பர் 19 | இரத்தினபுரி |
| திரு. மீட்ல பெரேரா | நவம்பர் 20 | தலைமையகம் |
| திரு. ஹர்ஷ பிரசாத் | நவம்பர் 20 | தலைமையகம் |
| திரு. ஆர். பிரியன்திகானி | நவம்பர் 20 | தலைமையகம் |
| திரு. மஞ்சுள ஹெட்டியாராச்சி | நவம்பர் 21 | தலைமையகம் |
| திருமதி. மதுஷா கயானி | நவம்பர் 21 | தலைமையகம் |
| திரு. நிம்சர சுபுன் | நவம்பர் 21 | கலென் விதுனுவெவ |
| திரு. பிரதீப் தர்மசேன | நவம்பர் 22 | அம்பலாங்கொடை |
| திரு. பாதிய அமரசிங்க | நவம்பர் 22 | தலைமையகம் |
| திரு. தில்ஷான் லக்சித | நவம்பர் 22 | நிட்டம்புவ |
| திரு. சஞ்சய உபுல் பண்டார | நவம்பர் 23 | தலைமையகம் |
| திரு. உதார சம்பத் | நவம்பர் 23 | தம்புள்ளை |
| திருமதி. திலினி சந்தமாலி | நவம்பர் 23 | குருநாகலை |
| திரு. எஸ். சுலக்ஷன் | நவம்பர் 23 | கல்முனை |
| திரு. பிரதீப் ஏக்கநாயக்க | நவம்பர் 24 | கல்கமுவ |
| திரு. பெத்தும் சம்பத் குரே | நவம்பர் 25 | தலைமையகம் |
| திரு. சனத் உதய பண்டார | நவம்பர் 25 | தலைமைகம் |
| திரு. சுதத் வீரசிங்க | நவம்பர் 25 | எம்பிலிபிட்டி |
| திரு. பீ. மயூரன் | நவம்பர் 25 | கந்தளாய் |
| திருமதி. நதீஷா லக்மாலி | நவம்பர் 25 | களுத்துறை |
| திரு. பீ. ரவிவர்மன் | நவம்பர் 25 | கல்முனை |
| திரு. சுனேந்திர மதுசங்க | நவம்பர் 26 | தலைமையகம் |
| திரு. சத்துர நுவன் | நவம்பர் 26 | பதுளை |
| திரு. உதார கவின் | நவம்பர் 26 | நுவரெலிய |
| திரு. கசுன் லக்ஷிக | நவம்பர் 26 | தலைமையகம் |
| திரு. கே. கஜேந்திரன் | நவம்பர் 26 | கல்முனை |
| திரு. சசித் எரங்க | நவம்பர் 27 | தம்புள்ளை |
| திரு. சந்தன ரணசிங்க | நவம்பர் 28 | குரநாகலை |
| திரு. ரங்க குணசேகர | நவம்பர் 28 | பண்டாரகம |
| திரு. ஹஷான் இந்திக | நவம்பர் 28 | ஹம்பாந்தோட்டை |
| திரு. திலின ருவன் | நவம்பர் 28 | அம்பலாந்தோட்டை |
| திருமதி. எஸ். கனுஜ | நவம்பர் 28 | வவுனியா |
| திரு. சந்துன் குமார | நவம்பர் 28 | அம்பலாந்தோட்டை |
| திரு. காஞ்சன பெலிகும்புற | நவம்பர் 29 | தலைமையகம் |
| திரு. தினேஷ் வாசுல | நவம்பர் 29 | கேகாலை |
| திரு. சத்துர நதீஷான் | நவம்பர் 29 | குளியாபிட்டி |
| திரு. ரஜித பெரேரா | நவம்பர் 29 | வென்னப்புவ |
| திருமதி. சஹினி அனுஷ்கா | நவம்பர் 29 | வென்னப்புவ |
| திரு. எஸ். பிரசாந்தன் | நவம்பர் 29 | வவுனியா |
| திரு. ஜே.எம். விதுஷான் | நவம்பர் 29 | வவுனியா |
| திரு. அசேல சமுத்திக | நவம்பர் 30 | தம்புள்ளை |